# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 10** **January 2015**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 10 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 13 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள். | 16 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 18 |
| சமூகம் நம்மைக் காக்கும் தாய் . . . | 20 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 27 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 31 |
| **அன்னை இலக்கியம்** | |
| பார்வைகள். . . . . . . . . . . . . . . . . | 33 |


**ஜீவியத்தின் ஓசை**

உடலின்
உணர்வாக ஆன்மா
வெளிப்படுவது
உடல் நலம்.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVII. The Sevenfold Chord of Being

Page 269

Para 12

Wherever Cosmos is, one principle only may be apparent.

It may seem to be the sole principle of things.

Everything else may appear to be no more than its forms and results.

They may seem not indispensable to cosmic existence.

But such a front presented by being is only an illusory mask.

The real truth is behind the appearance.

Where one principle is manifest in Cosmos, there all the rest must be.

They are not merely present and passive, but secretly at work.

In a given world it may be in possession of all seven principles.

This may be at a higher or lower degree of activity.

In another world they may be all involved in one principle.



## 27. சப்த ஜீவன்

பிரபஞ்சம் என்றொன்றிருந்தால், அதில் ஒரு தத்துவம் மட்டுமே வெளிப்படையாகத் தெரியும்.

அது பொருட்களின் ஒரே தத்துவமாகத் தெரியும்.

மற்றவை அதன் தோற்றமாகவும் முடிவாகவும் காணப்படும்.

பிரபஞ்ச வாழ்விற்கு அவை இன்றியமையாதவையாக இல்லாதது போல் தோன்றலாம்.

ஜீவனின் அப்படிப்பட்ட தோற்றம் ஒரு மாயையான முகமூடி.

அதன் உண்மை தோற்றத்தின் பின் உள்ளது.

எங்கு பிரபஞ்சத்தில் ஒரு தத்துவம் வெளிப்படுகிறதோ, அங்கு மற்றவையும் இருக்க வேண்டும்.

அவை அங்கு உயிர்ப்பற்று சாட்சியாக மட்டும் இல்லை. அது மறைமுகமான வேலையில் ஈடுபட்டுள்ளது.

உலகம் என்று ஒன்று இருந்தால் அது ஏழு தத்துவங்களையும் உட்கொண்டிருக்கும்.

அது உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலைக்கான செயல்பாடாக இருக்கலாம்.

மற்ற உலகத்தில் அவை ஒரே தத்துவத்தில் புதைந்து இருக்கலாம்.

It becomes the initial or fundamental principle of evolution in that world.
Evolution of the involved there must be.

A world may start apparently from the involution of all in one power.
But the evolution of the sevenfold power of being must be any world's destiny.
Its destiny must be the realisation of its septuple Name.

Therefore the material universe had to evolve apparent life from hidden life .
It had to evolve apparent mind from its hidden mind.

It must evolve apparent Supermind from hidden Supermind.
It must evolve the triune glory of Sachchidananda from the concealed Spirit.

The question is whether this emergence will take place on earth.
Will it take place in the human creation?
Will it take place in this or any other material scene?
Will it take place in this cycle?
Will it take place in any other cycle of the large wheelings of Time?
Time is its instrument and vehicle.



அது அவ்வுலகத்தின் முதலான அல்லது அடிப்படையான பரிணாமத்திற்குரிய தத்துவமாகிறது.
உள்ளே புதைந்திருப்பது பரிணாமத்தால் வெளிவருவதாக இருக்க வேண்டும்.
ஒரு சக்திக்குள் அனைத்தும் புதைந்து, அதனின்று ஒரு உலகம் வெளி வரலாம்.
ஜீவனின் எழுமடங்கு சக்தி பரிணாமத்தால் வெளி வருவது எந்த உலகிற்கும் முடிவாக இருக்க வேண்டும்.
அதன் முடிவு அந்த எழுமடங்கு சக்திக்கான மந்திரத்தை அறிவதாகும்.
ஆகவே, பிரபஞ்ச உடல் பரிணாமத்தால் மறைந்துள்ள வாழ்வை வெளிப்படுத்த வேண்டும்.
மறைந்துள்ள மனத்தை பரிணாமத்தால் வெளிக் கொணர வேண்டும்.
மறைந்துள்ள சத்திய ஜீவியத்தைப் பரிணாமத்தால் அது வெளிப்படுத்த வேண்டும்.
சிறப்பான, மூவகைத் தத்துவங்கள் ஒருங்கிணைந்த சச்சிதானந்தத்தை, ஒளிந்துள்ள ஆத்மாவிலிருந்து வெளிப்படச் செய்ய வேண்டும்.
இவ்வெளிப்பாடு நாம் வாழும் இவ்வுலகில் நடக்குமா என்பது கேள்வி.
மனிதப் படைப்பில் இது நடக்குமா?
இது இந்த ஜட உலகில் அல்லது வேறெங்காவது சாத்தியமா?
தற்போதைய பரிணாமச் சக்கரத்தில் இது நடைபெறுமா?
வேறு எந்தப் பெரிய காலச் சக்கரத்தின் சுழலிலாவது இது ஏற்படுமா?
காலம் அதன் கருவி மற்றும் வாகனம்.

The ancient seers believed in this possibility for man.

They held it to be his divine destiny.

The modern thinker does not even conceive of it.

If he conceived, he would deny or doubt.
He may see a vision of the Superman.
But it would be a figure of increased mentality or vitality.

He would admit no other emergence.

He would see nothing beyond these principles.

Up till now these have traced our limit and circle.

This human creature in this progressive world has a divine spark.
Real wisdom with him is likely to be the higher aspiration.

It is not with the denial of aspiration.
It is not with the hope that limits itself.
It is not with the hope that circumscribes itself.
That would be within narrow walls of apparent possibility.
They are only our intermediate house of training.
There is a spiritual order of things.



பண்டைய முனிவர்கள் மனித வர்க்கத்தின் இந்த சாத்தியக்கூற்றை நம்பினர்.

அதை அவர்கள் மனிதனுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட முடிவாகக் கருதினர்.

நவீன அறிஞர்கள் இதை ஒரு எண்ணமாகக்கூட அறியவில்லை.

அப்படியே அறிந்தாலும், அதை மறுத்தனர், சந்தேகித்தனர்.

சத்திய ஜீவனை அவர்கள் திருஷ்டியாகக் காணலாம்.

ஆனால், அது மனதுக்கோ அல்லது பிராணனுக்கோ உரிய ஓர் வடிவமாக இருக்கும்.

அதைத் தாண்டிய நிலையில் எந்த வெளிப்பாட்டையும் அவர்களால் ஏற்க முடியாது.

அதைக் கடந்த எந்த தத்துவத்தையும் அவர்களால் காண முடியாது.

இதுவரை இவையே நம் எல்லையாகவும், பரிணாமத்திற்கான சுழற்சியாகவும் இருந்தன.

பரிணாமம் பெறும் இவ்வுலகில், இந்த மனித ஜீவனுக்குள் தெய்வக்கனலின் பொறி உண்டு.

உண்மையான விவேகத்தைப் பெறுவது அவனுடைய உயர்ந்த ஆர்வமாக இருக்கலாம்.

அது ஆர்வத்தை மறுப்பதல்ல.

அது ஆர்வம் தன்னை வரையிட்டுக் கொள்வதும் அல்ல.

அது ஆர்வம் தன்னை கட்டுப்படுத்துவதும் அல்ல.

அது சாத்தியமானதைக் குறுக்குவதாகும்.

இவை நம் பயிற்சிக்காக இடையில் ஏற்பட்டவையாகும்.

ஆன்மீக விஷயங்களுக்கான ஒரு ஒழுங்கு முறை உள்ளது.

In that, the higher we project our view, the greater the Truth.
That Truth seeks to descend upon us.
It is already there within us.
It calls for its release from the covering.
That covering conceals it in manifested Nature.

## ஜீவிய மணி

உலகில் நடப்பவை அனைத்தும் அருளால் என்றாலும், மனிதன் சிலவற்றை மட்டும் விரும்புகிறான். அந்தத் தேவைகளையும், ஆசைகளையும் மட்டும் பூர்த்தி செய்வது இறைவன் கடமை அல்ல. அவை பூர்த்தியான பின்னரே தன்னை மனிதன் நினைப்பான் என்பதால் இறைவன் மனிதனிடம் இல்லறத்தைப் பூர்த்தி செய்து, துறவறத்தை மேற்கொள்ளும் அமைப்பை ஏற்படுத்தினான். மனிதனுடைய சுயநலமான ஆசைகளைப் பூர்த்தி செய்வதைத் தம் பரநல-மான இலட்சியமாகக் கொண்டவர் அன்னை. இறைவனின் திருவுள்ளத்தைப் பூவுலகில் சொர்க்கமாக மனிதன் அனுபவிக்க அவதாரம் எடுத்த அன்னை அவனுக்கு அளவு கடந்து வாரி வழங்குபவைகளில் முக்கியமானவை இரண்டு:

*1) அபரிமிதமான அதிர்ஷ்டம்*
*2) அளவுகடந்த பாதுகாப்பு*

மிகமிக ஆர்வமாக, மனிதன் கண்களை மூடி, இவற்றிலிருந்து விலகி, தன் நாடி நரம்புகள் விரும்பும் சுவையை ஆர்வமாக நாடுவதையே தன் வாழ்வு எனக் கொள்கிறான். சுவையை ஏற்று அதில் அமிழ்ந்தால் சுவை மனிதனை அழிக்கும். உலகில் இன்று இல்லாத அதிர்ஷ்-டத்தையும் பாதுகாப்பையும் அன்னை வழங்குவதை முறையாக ஏற்றுப் பலன் பெறுவது வாழ்க்கைக்கு உகந்தது.



அதில், எவ்வளவு உயர்வாக நாம் நம் எண்ணத்தைச் செலுத்துகிறோமோ அவ்வளவு உயர்வான சத்தியம் புலப்படும்.
அந்த சத்தியம் நம்முள் இறங்க விழைகிறது.
அது ஏற்கனவே நம்முள் புதைந்து உள்ளது.
திரையின் பின் மறைந்துள்ள அது வெளிவர குரலெழுப்புகிறது.
அத்திரை அதைச் சிருஷ்டிக்குள் ஒளித்து வைக்கிறது.

முற்றும்

## ஜீவிய மணி

எச்செயலைச் செய்தாலும் வெற்றி உறுதி எனும் நிலையை இராசி, அதிர்ஷ்டம் என்கிறோம். பொதுவாக எங்கெங்கு சக்தி உபரியாக உள்ளதோ, அங்கெல்லாம் அதிர்ஷ்டத்தின் இரகஸ்யம் உறைகிறது. அதிர்ஷ்டம் என்பது உழைப்பு, பணிவு, சூட்சும அறிவு என உயர்ந்த அடிப்படைகளில் பொதிந்துள்ளது. இந்த உண்மையை ஸ்ரீ அரவிந்தம் ஏற்கிறது. ஆனால் இது உண்மையின் பகுதி மட்டுமே. இதையும்விட முழுமையான உண்மை எது? அதிர்ஷ்டத்தின் தோற்றம் - தாழ்ந்த பிறப்பு, புறக்கணிப்பு, ஆதரவற்ற நிலை, தொடர்ந்து வரும் தோல்வி போன்ற, தாழ்ந்த அடிப்படைகளில் அமையும் என்பதே அது. இன்னும் கெட்ட பெயர், கடுமை, நோய், துன்பம் போன்றவற்றில் அதிர்ஷ்டத்தின் இரகஸ்யம் உறைகிறது என்பது ஸ்ரீ அரவிந்த தத்துவம். இந்த இரகஸ்யம் இரு பகுதிகளாக உள்ளது:

1) தாழ்ந்ததை உயர்த்தும் போது பலன் அபரிமிதமாக வரும் எனும் தத்துவத்தை மனமும் உணர்வும் ஏற்க வேண்டும்.
2) அதற்குரிய முயற்சியைப் பழைய மன நிலையுடன் மேற்கொள்ளாமல் புதிய நிலையுடன் நிறைந்த மகிழ்வுடன் செய்ய வேண்டும். அதாவது, என் முயற்சி சத்திய ஜீவிய முயற்சி என அறிதல் வேண்டும்.

இம்மாதச் செய்தி

# நன்றி மறந்த நேரம் நல்லது உயர்ந்து பலித்து தோற்கும்.





## Page 168: An early attempt, a first experiment
## முதன் முயற்சி, ஆரம்ப சோதனை

- ✡ பிறந்த குழந்தையான பூமாதேவிக்கு இது விளையாட்டுக் கருவி
- ✡ ஞானம் மேல்மனத்துடன் முடியவில்லை
- ✡ அறியாமையின் சிறகுகளில் வாழும் ஞானம்
- ✡ ஆழ்ந்த ஆபத்தான நிலையை அது எட்டிப் பார்க்கத் துணியவில்லை
- ✡ நிமிர்ந்து நினைக்க முடியாததை அளவிடும் ஆண்மையில்லை
- ✡ அகமெனும் ஆழத்துள் ஆழ்ந்துணர வேண்டியதுண்டு
- ✡ மனமெனும் குறுகிய எல்லையைக் கடந்தபொழுது
- ✡ உயரத்தில் பெரும் ஞானம் திருஷ்டியாய் நம்மை சந்திக்கிறது
- ✡ ஆத்ம நோக்கின் அளவிறந்த ஒளிப்பரப்பு
- ✡ முடிவாக சாட்சியாய் புருஷன் நம்முள் விழித்தெழுகிறான்
- ✡ புலப்படாத சத்தியத்தைப் பார்த்து அப்பாலையறிய முயன்று
- ✡ அனைத்தும் புதிய அற்புத வதனம் பெற்று
- ✡ உலகம் உற்பத்தியாகுமிடத்தில் இறைவனின் இதமான ஒளி எழுந்து நடுங்கும்
- ✡ காலத்தின் நெஞ்சு பெருநெறியைப் போற்றி வாழ்ந்து
- ✡ வாழ்வின் எல்லை நொறுங்கி அனந்தத்துடனிணைந்து
- ✡ பரந்த குழப்பம் இறுகிய திட்டமாகி
- ✡ பிரமாதமான கடவுளின் குழப்பமான சிக்கல்
- ✡ ஆட்டம், விவரமற்ற இறைவனின் கடமை
- ✡ நம் முயற்சி சிறு வாழ்வின் சோதனை
- ✡ சொல்லிழந்த இரகஸ்ய சக்தி

✡ ஜட இருளின் இரவினின்று சோதனை செய்து
✡ சத்தியம், ஆனந்த ஜோதியின் பிரம்மத்தைச் சந்தித்து
✡ தோற்றத்தைக் கடந்து சத்தியத்தையடைந்து
✡ மனித மனத்தின் புலனில் உழன்று
✡ அறியாமையின் அகன்ற ரூபங்களுள்
✡ எண்ணமும், சொல்லும் எழுப்பும் அடையாளக் குறியீடு
✡ அனைத்தும் சுட்டும் சத்தியத்தை நாடும்
✡ திருஷ்டியின் சுடரைக் கண்டு அதன் மூலத்தைத் தேடி
✡ வேலையனைத்தையும் செய்பவனை அறியும் வேலையை மேற்கொண்டு
✡ நாமுணராத பிரம்மம் உள்ளேயிருந்து வழிகாட்ட முனைந்து
✡ மேலுள்ள அறிய முடியாத பிரம்மம் நம் இலக்கு
✡ அனைத்தும் குருட்டு இயற்கையின் கடும் வேலையில்லை
✡ மேலிருந்து நம்மைக் காக்கும் சப்தம், விவேகம்
✡ தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும் சாட்சியின் வேலை
✡ பார்வையற்ற பரப்பின் பார்வையைக் கடந்த நேத்திரம்

## ஜீவிய மணி

அகந்தை உள்ளவரையில் உழைத்து மிகவும் பாடுபட்டு மனிதன் முன்னேற வேண்டியுள்ளது.

ஆனால் அகந்தை அழிந்த பின்னர் சாதிக்கின்ற மனிதன் ஏற்பது ஆனந்தம் மட்டுமே.

**ஆனந்தம் உயர்ந்தால், சாதனை உயரும் என்பது அன்னையின் யோகம்.**



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/15. ஒழுங்கும் சட்டமும், நியாயம் கருணை மூலம் நல்லதின் நிலையான வாழ்வாகின்றன.**

- ஒழுங்கு மனம் பெற்ற திறமை. மனம் வளரும்முன் ஒழுங்கு என்று ஏற்படவில்லை.
- ஒன்றன்பின் ஒன்றாய் செயல்கள் வருவது ஒழுங்கு.
- இலக்கம் என்பதை நம்பர் என்கிறோம்.
  729 என்றால் 7 நூறு இரண்டு பத்து 9 ஒன்றுகள்.
  அதை இலக்கம் மாற்றி எழுதினால் மதிப்பு மாறும்.
- மனம் என்பது உலகில் உற்பத்தியான பின்னரே இதுபோன்ற அம்சங்கள் ஏற்பட்டன.
- அவற்றுள் ஓர் ஒழுங்குண்டு (Order).
- Q க்யூ வரிசையை ஒழுங்கு என அறிவோம். இன்னும் நம் நாட்டில் அது ஏற்கப்படவில்லை.
- **ஒழுங்கு துறைக்கேற்ப மாறும். Q க்யூ வரிசை, குறித்த நேர செயல்பாடு வெவ்வேறு வகையான ஒழுங்கு முறை.**
- சமையல் செய்யும் ஒழுங்கு, பரிமாறும் ஒழுங்கு, சாப்பிடும் ஒழுங்கு மாறுபடும்.
- ஒழுங்கில்லாமல் சமையலாகாது, பரிமாற முடியாது, சாப்பிட இயலாது.
- நாம் பேசும்பொழுது சொற்கள் வெளிவருவதற்குரிய ஒழுங்கில்லாவிட்டால் ஊமை உளறுவது போல் சப்தம் வரும், சொல் எழாது.
  **ஒழுங்கு முறையால் சப்தம் சொல்லாக மாறுகிறது.**
- மனிதனாய்ப் பிறந்தவன் மண்ணாங்கட்டியாக, மனிதனாக, குடும்பஸ்தனாக, கணவனாக, தகப்பனாக, மகனாக, தலைவனாக, உயர்ந்தவனாக ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய ஒழுங்கு முறையை ஏற்கிறான்.
- சமூகம் ஓர் ஒழுங்கை ஏற்படுத்தியிருந்தால் மனிதன் அதை ஏற்கலாம்.

- சமூகம் கூட்டமானது. சட்டம், ஒழுங்கு, நியாயத்தால் சமூகமாக, ஊராக மாறுகிறது.
- மனித வரலாறு சட்டம் ஏற்படும்முன் இருந்தது.

  **பழக்கம், முறையாகி, முறையின் ஒழுங்கை ஊர் ஏற்று, ஏற்றதை நீண்ட நாள் பின்பற்ற முடிவு செய்வது சட்டம்.**
- சட்டம் பொது மக்களுக்குரியது.

  கட்டுப்படாத மனிதனைக் கட்டுப்படுத்த ஊர் அதிகாரத்தைச் செலுத்துவது சட்டம்.
- நல்லது கெட்டது என்ற பாகுபாடு ஏற்பட்டு, கெட்டதை விலக்கி நல்லதைச் செய்ய முனையும்பொழுது நல்லதை மனம் ஏற்பது மனச்சாட்சி.

  மக்கள் அனைவர் மனச்சாட்சியும் ஊராரின் மனச்சாட்சியாவது

  **நியாயம் மனதில் பிறப்பது.**
- பிறந்த நியாயத்தைச் செயல்படுத்த ஊர் ஏற்கும் முறை-யொன்றைக் கண்டுபிடிப்பது அதற்குச் சொல்லாலான உருவம் கொடுப்பது

  **சட்டம் ஏற்படுவது.**

  **ஊராரின் மனச்சாட்சி அதிகாரம் பெற்ற சொல்லாவது சட்டம்.**
- நியாயம், சட்டத்தைவிட உயர்ந்தது.
- ஊரார் சட்டத்தைச் செயல்படுத்தலாம். அதே போல் நியாயத்தைச் செயல்படுத்த முடியாது. **ஒரு கட்டத்தில் அநியாயத்தை ஊரார் நியாயமாக ஏற்காமல் ஊர் நிலை கொள்ளாது.** அநியாயத்தைத் தலைவரோ, பலரோ மேற்கொண்டபொழுது அதை அழிக்க முடியாது. அழித்தால் ஊர் அழிந்து விடும்.

  நியாயம் தழைக்க அநியாயம் அடிப்படை என்பதை

  **அநியாயம் ஆண்டவனின் நியாயம் எனக் கூறலாம்.**
- உயிரையும், உடமையையும், உரிமையையும் தியாகம் செய்து இலட்சக்கணக்கானவர் போராட்டம் நடத்தி, சத்தியாக்கிரகம் செய்து காங்கிரஸ் வளர்ந்தது.

  **எதுவுமே செய்யாமல் முஸ்லீம் லீக் உணர்ந்தது.**



உண்மை வளரும்பொழுது பொய் வளர்வது
ஆண்டவன் நியாயம்.

- இதன் பின்னுள்ள கருத்தையும், அதன் மூலத்தையும் அறிய முயல்வதே

  **பரிபூரண யோகம்.**

## ஜீவிய மணி

மரபை விட்டு அன்னையை ஏற்பதன் சிரமத்தை அனைவரும் அறிவர். அதைச் செய்து பலன் பெற்றவர் அநேகர். அன்னை கூறும் மனமாற்றம் மரபை விட்டு மாறுவது. சுபாவம் நாய் வால் போன்றது. எவராலும் மாற்ற முடியாது என்பது தெரியும். அம்மாற்றம் யோகத்திற்கு உரியது. மனம் நம் கையில் உள்ளது. அதை மாற்றலாம். தவறான கருத்தை விட்டு நல்ல கருத்தை ஏற்கலாம். போட்டியை விட்டு ஒத்துழைக்கலாம். பொறாமையை விட்டு நல்லவராக இருக்கலாம். இது போன்று மனம் மாற வேண்டிய இடங்கள் அநேகம். இது அனைவரும் அறிந்தது. அம்மாற்றத்தைத் தன்னுள் ஏற்படுத்துபவர் அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்யலாம்.

- உலகின் அனுபவம் சுபாவம் மாறாது என்பது.
- அபிப்பிராயம் மாறினால் அனைவரும் இனியவராகின்றனர்.
- சுபாவம் மாறுவது வாழ்வைப் பொறுத்தவரை பேர் அதிர்ஷ்டம்.
- யோகத்தில் சுபாவம் மாறினால் திருவுருமாற்றம் வரும்.
- காணாமற்போன மோதிரம் கிடைப்பதும், சுபாவத்தை மாற்றுவதும் அன்னை அருளுக்கு ஒன்றேயாகும்.
- நாம் அன்னையை நம்ப வேண்டும். நம்பி நம் சுபாவத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
- நமக்கு முடியாத காரியம் அது.

**நம்மால் அன்னையிடம் நம் சுபாவத்தை ஒப்படைக்க முடிந்தால்,**
**அது சரணாகதியாகும். அதுவே அன்னையை அறிவதாகும்.**
**பிறவிப்பயனை அடைந்ததாகும்.**

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 108. போன உயிர் திரும்பி வருவது.

- போகும் உயிர், போன உயிர் திரும்புவது மனித முயற்சி-யிலில்லை.
- பூரண யோகம் பலிப்பவருக்கு மரணமில்லை.
- மரண வாயிலிலுள்ளவர் ஓர் அன்பரால் திரும்பி வருகிறார் எனில், அந்த அன்பருக்கு யோகம் பலிக்கும்.
- பகவானும் அன்னையும் சாதகர்களைத் தங்கள் ஸ்தாபனத்தில் சேர்ப்பது இந்த உலகத்திலில்லாத பவரை அவர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது.
- உயிர் போகும் தருணம் பலவகையானது.
  - வயது முதிர்ந்த நிலை.
  - சவரட்சணையின்றி அழியும் உடல்.
  - ஒரு உறுப்பு சீரழிவது.
  - சர்க்கரை, B.P. போல் ஒரு reading அளவு கடப்பது.
  - விக்கல், தும்மலால் உயிர் போவது.
  - முக்கியமான குறையை கவனிக்காததில் ஏற்படும் ஆபத்து.
    காயம் சீழ் பிடித்து ஆபத்தாவது.
  - மூர்ச்சை தவறுவது.
  - மயக்கம் நிலையைக் கடப்பது.
- பிறந்த நாள் முதல் ஒரு வேளை சாப்பிட்டவர் 60 அல்லது 70 வயதுவரை இருப்பதில்லை.
- அவர்கட்கு மயக்கம் பசி மயக்கம்.
- உடல் மெலிந்து சவரட்சணையை இனி ஏற்க முடியாத நிலை ஏற்படும்.



- அப்படிப்பட்டவர் மயக்கம் வந்து பிழைக்காது என்ற நிலையில் இருமுறை பிழைத்தபின் மூன்றாம் முறை மயக்கமானார்.
- இவர் ஆயுள் முழுவதும் ஆசைப்பட்டது நிறைவேறவில்லை - வீடு கட்ட முடியவில்லை - என்பதால் உயிருடனிருந்தார்.
- அவர் பிழைத்து எழுந்தார் - 1 மணி நேரத்தில்.
  அதன்பின் வீடு கட்டினார்.
  30 ஆண்டுகள் வாழ்ந்தார்.
- அந்த சக்தி உலகிலில்லை.
  ஆத்மாவுக்குண்டு என்றால் அதற்குரிய சாங்கியம் மூலம் அது வர வேண்டும்.
  வீடு கட்டலாம் என்ற நம்பிக்கை அவரை உயிர்ப்பித்தது.
  அது அன்னை சக்தியால்.
  அந்தச் சக்தியை பெறுபவர், தருபவர் அன்பர்கள்.
  அது யோக வாயில்.

### ஜீவிய மணி

இல்லாததை உண்மையாகப் பேசக் கற்றுக் கொண்டவர்கள் உண்டு. மிக அழகாக அப்பேச்சு அமைந்தால், அதையே பலமுறையும் பேசினால் பேசுபவரே அது இல்லாதது என்பதை மறந்து அதையே உண்மை என நம்புவதும் உண்டு.

- வாழ்க்கை சொல்லுக்கும், எண்ணத்திற்கும் பலன் தரவல்லது அன்று.
- மனத்தின் உண்மைக்கும், செயலுக்கும் பலன் தரக்கூடியது.
- அன்னை, மனம் உண்மையாக இருந்தால், நினைவுக்கே பலனை முதலிலேயே தருவார்.

## அஜெண்டா

### ஓம் அறையை தங்க ஒளியால் நிரப்பியது.
### அன்னை தன் மந்திரத்தை வெளியிடவில்லை.

Volume IV, Page 131

- இந்தியாவைப் பற்றித் தெரியும்முன் அன்னை பாரிசில் ஒரு கூட்டத்திற்குப் போனார்.
- பேச்சாளர் இந்தியர்.
- அவரை விபரம் தெரிந்தவராக அன்னை நினைக்கவில்லை.
- பேச்சின் முடிவில் ஓம் என்று உச்சரித்தார்.
- **அந்த ஹால் முழுவதும் அவ்வொலி தங்க நிறமாகப் பரவியது.**
- அது அன்னைக்கு மட்டும் தெரிந்தது.
- அன்னை அதைப் பொருட்படுத்தவில்லை. நினைவில் அது அவருக்கு நிற்கவில்லை.
- வேறு சில சமயங்களில் ஓம் உச்சரிக்கக் கேட்ட பொழுதும் தங்க ஒளி தெரிந்தது.
- அதனால் அன்னை ஒலியில் ஒளி வெளிப்படும் என அறிந்தார்.
- ஓம் என்ற மந்திரத்துள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக கோடிக்கணக்கானவர் ஒலித்த மந்திர சக்தியுள்ளது என்று கூறினார்.
- **Glory to Thee Lord** என்று ஒரு பிரார்த்தனை எழுதினார்.
- அன்னை எழுதிய ஏராளமான பிரார்த்தனைகளில் பகவான் 140-ஐ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- **இப்பிரார்த்தனை அதனுள் ஒன்று.**
- **Glory to Thee Lord** என்பதுடன் அன்னையின் மந்திரமாக மனதில் எழுந்ததில் மேலும் சில சொற்களிருந்தன.
- சமஸ்கிருதத்தில் அதை மொழி பெயர்த்தபொழுது அதன் பவர் குறையவில்லை.



- என் மந்திரம் என அன்னை கூறுவதை அன்னை வெளியிடவில்லை.
- அதில் இரகஸ்யமில்லை. அது பிறருக்குப் பயன்படாது என்றார்.
- ஒரு குருவின் சித்தி(**siddhi**)யை அவர் மந்திரம் தாங்கி வரும்.
- சிஷ்யனுக்கு அவனுடைய சொந்த மந்திரம் குரு தரும் மந்திரத்தைவிடச் சிறந்தது.
- தனக்கே மந்திரம் உதயமாக அதற்குரிய நேரத்தில் அது உள்ளிருந்து எழ வேண்டும்.
- பொதுவாக அபயக் குரல், ஆபத்தில் எழும்.
- **அது ஆபத்தை விலக்கினால், அது அவருக்கு ஆபத்தை விலக்கும் மந்திரமாகும்.**
- ஆர்வத்தால் எழுவது மந்திரம்.
- ஆர்வம் ஜீவனை நிரப்பி, மந்திரமாக வெளி வர வேண்டும்.
- 3 நாள் அழைப்பை ஒருவர் தொடர்ந்தால் 30 நாளுக்கும் மந்திரம் எழும்.
- மந்திரம் மனதில் எழுந்தால் அவர் ரிஷியாவார்.
- அம்மந்திரம் அவருக்கு யோக சித்தி தரும். யோகம், தவம், சமாதி ஆகியவை மந்திரத்திற்குட்பட்டவை.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

காலத்தை நாம் அறிவோம். கடந்ததை ஆழ்ந்து நினைக்கிறோம். எதிர்காலத்திற்கு யோசனை பிறக்கிறது. கடந்தது, நிகழ்காலம், எதிர்காலம் என்ற நிலைகள் காலத்திற்கு உட்பட்டவை. கடந்ததை மறந்து, எதிர்காலத்தை நினைக்காமல் இன்றுள்ள கடமையில் நம்மை மறந்து நாம் செயல்படும் நேரம் நாம் காலத்தைக் கடக்கிறோம்.

# சமூகம் நம்மைக் காக்கும் தாய்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவு : திரு நாகராஜன், ராணிப்பேட்டை மையம்.

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 07/09/2014

உடலுக்குத் தாய் பெற்றவள், ஊரைப் பெற்றெடுத்த தாய் சமூகம். சமூகம் மனிதனுக்குப் பாட்டி, தாயைப் பெற்றெடுத்த பெரிய தாய். மூச்சு இடைவிடாமல் உயிரைக் காப்பது போல், சமூகம் இடைவிடாது நம்மைக் காப்பாற்றி, உயிரளித்து, உற்சாகமூட்டுவதை நாம் கண்டுகொள்வதில்லை. கடையில் போய் ஒரு பொருள் வாங்கும்பொழுது - பழம், பேனா, நாற்காலி, புத்தகம் - சமூகம் இதைத் தயாரித்து விநியோகம் செய்வதை நாம் நினைவு கூர்வதில்லை. போலீஸ் ஸ்டேஷனில்லாவிட்டால் ரோட்டில் நடக்க முடியாது. குழந்தைகளைத் தனியே அனுப்பமாட்டோம். கேரளாவில் சூரியன் மறைந்தபின் பெண்கள் வெளியே வருவதில்லை. **ஹர்த்தால் அன்று இது சற்று அதிகமாகப் புரியும்.** ஹர்த்தாலில் போலீஸ் சற்று ஒதுங்கியிருப்பதால், அவரவர் தம் எதிரிகளைத் தாக்கும் சந்தர்ப்பமாக அதைக் கொள்வதும் உண்டு. எவரும் அடுத்த வீட்டில் நுழைந்து பொருட்களை எடுத்துப் போகவில்லை என்பது மக்களுடைய நாகரீகமான கட்டுப்பாடு என்று கூறுவதைவிட சட்டம், போலீஸ் தடி மூலம் அமுலாகும் என்பதால் என அறியலாம். எரியும் வீட்டில் பிடுங்கியவரை இலாபம் என்று இன்றுவரை நடைமுறையில் காண்கிறோம். ஒருவன் ஏமாந்தவனானால், 1) அவன் அழ அழ மற்றவர் வெறியேற்றுவர், 2) அவன் பொருட்களைப் பறித்துக் கொள்வார்கள், 3) அசகாய சூரர்கள் அவனிடம் எதைப் பெற்றாலும் ஏமாற்றலாம் எனக் கருதி அவனிடம் பல பொருட்களையும் கேட்டுவாங்கி, ''ஏமாற்றி விட்டேன், திரும்பி வாங்கி விடுவாயா?'' என சவால் விடும் சமூகம் இது. **உள்ளதைக் காப்பாற்ற முடியாத மனிதனை ஊரின் அநியாயத்திலிருந்து சமூகம் காப்பாற்றும்.** படிக்க வசதியற்றவனுக்குப் படிக்க எல்லா வசதிகளையும் சமூகம் தருகிறது.



திருமணத்திற்குத் தகுதியில்லாதவர்க்குத் திருமணம் செய்து வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைத் துணையை வழங்குகிறது. பெற்றவர் பராமுகமானால், கொடுமை செய்தால், அதனால் பையன் ஓடிப்பிழைக்க முயன்றால், சமூகம் அவனைக் கோடீஸ்வரனாக்குகிறது. பிள்ளைகள் வயதான காலத்தில் பெற்றோரைக் காப்பாற்றாவிட்டால், அவர்கட்கு பென்ஷன் தந்து, முதியோர் இல்லத்தில் பாதுகாக்கிறது. வீடு கட்ட நினைக்க முடியாதவர்க்கு வீடு கட்டிக் கொடுக்கிறது. **சம்பாதிக்க முடியாதவனுக்குக் கடன் உதவி, முதல் தேவைப்பட்டால், சம்பாதித்துச் சேமித்து வைத்தவன் முதலை பாங்க் மூலம் வாங்கித் தருகிறது.** அறிவேயில்லாத ஆயிரம் பேருக்கு அறிவிற்சிறந்த மேதைகள் உருவாக்கிய பொருட்களை அனுபவிக்கும் வகையில் உற்பத்தி செய்து தருகிறது. கரணம் தப்பினால் மரணம் என்று — நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமையுள்ள உலகில் — அமைந்த வாழ்வில் பெரும்பாலும் மரணத்திலிருந்து காப்பாற்ற வழி செய்கிறது. மரணத்தால் அழிந்தவன் குடும்பம் வாழ இன்ஷூரன்ஸ் ஏற்பாடுண்டு. உள்ளூரை விட்டு **B.A.** பாஸ் செய்யும்வரை ரயில் பிரயாணம் செய்யாதவருக்குப் பிள்ளைகளை அமெரிக்கா அனுப்பும் வசதி சமூகம் தருவதாகும்.

சமூகம் உயிரைக் காப்பாற்றுகிறது. உள்ளம் வளம் பெறும் கலைகளையும் கற்பனைகளையும் வழங்குகிறது. ஆயுள் 1947-இல் 30 ஆண்டாக இருந்ததை 60 ஆண்டாக வாழ உதவுகிறது. குடிநீரைச் சுத்தம் செய்து அதனால் வரும் வியாதிகளினின்றும் காப்பாற்றுகிறது. நிலத்தில் மண்வெட்டி எடுத்து வேலை செய்தவனுக்கு ஆலையில் வேலை தருகிறது. **Pick Pocket**-டையே பரம்பரையாகப் பழகி இந்தியா முழுவதும் பரவிய பரம்பரையை நாணயமான மக்களாக மாற்ற நெசவாலையை ஏற்படுத்துகிறது. 50 மைல் பிரயாணம் செய்தறியாத மக்களுக்கு 5000 மைல் பிரயாணம் செய்யும் வாய்ப்பை அளிக்கிறது. கலவரங்களில் மனிதன் மிருகமாக நடந்து ஒரு கோடி பேர் ஊரை விட்டுப் போய் அவதியுற்ற பொழுது மனிதனுடைய உண்மை நிலையை நாம் அறிய முடிந்தது. அவர்கள் மீண்டும் வாழ்வு பெற சர்க்கார் செய்த

பேருதவி, இன்று எந்தப் பகுதியிலும் (அவர்கள் தங்கிய இடங்களில்) அவர்களே அதிக வசதி பெற்றவர் என்ற நிலையை அடைய உதவி செய்தது சமூகம். சமூகத்திற்குச் சக்தியுண்டு. அதை நமக்குத் தருகிறது. கேட்காமலும் தருகிறது. சமூகம் படைக்கும் திறனுடையது. மனிதன் படைக்க முடியாததைப் படைத்து அவனுக்குப் படைக்கிறது. தாயாகவும், தந்தையாகவும், ஆசானாகவும், குருவாகவும், நண்பனாகவும், உறவினனாகவும், தெய்வமாகவும் எல்லாமுமாக சமூகம் மனிதனுக்குச் செயல்படுகிறது. மனிதனை மேதையாக்குவது சமூகம். சமூகம் உலக அனுபவங்களையும், அறிவுக் களஞ்சியங்களையும் திரட்டி வைத்துள்ளது. கல்லூரிகள் மாணவர்கட்கு அதன் ஒரு பகுதியைத் தருகின்றன. முழுவதையும் தரும் அமைப்பு கல்லூரியில் அனைவருக்கும் பொதுவான பாட திட்டத்தையே ஏற்க முடியும். **மேதை என்பது தனி ஒருவன் தன் திறமையின் திண்மையால் உச்சகட்ட உயர்வு பெறுவது**. அந்த அமைப்புக்குக் கல்லூரி இடம் தராது. புதியதாக வந்த Web Course-களில் கல்லூரிகளைவிட அதிக சந்தர்ப்பம் உண்டு. மேதைகளை (புதிய Genius) உற்பத்தி செய்யும்படி Web Course-கள் அமைக்க முடியும் என்றாலும் ஜனத்தொகையில் பாதிபேர் தற்போது அடிப்படையான கல்வியறிவும் பெறாத நிலையில் இருப்பதால், அதை முதன்மையாக கவனிப்பது அவசியமாகிறது. **கல்வி முறையின் நுணுக்கங்கள் ஏராளம்**. சமூகம் முதல் நிலையிலிருந்து முடிவு வரையுள்ள எல்லா சிறப்பையும் பெற்றுள்ளது. பெற முன்வருபவர் பெறலாம் என்பதே நிலை. அது போல் ஒரு நூற்றாண்டில் மேதைகளாக உருவானவர் 100 பேரில்லை. 20-ஆம் நூற்றாண்டில் உலகம் கண்ட மேதைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். **ஆனால் சமூகம் தனி மனிதனை மேதையாக்கவல்ல ஞானம் வழங்கும் தாய்**. கல்வியென்பதை கல்வி, கேள்வி எனவும் கேள்வி ஞானம் எனவும் குறிப்பிடுவார்கள். உலகின் அறிவு, அனுபவம், ஞானம், திறமை, திண்மை, சூட்சுமம், நுணுக்கம் ஆகியவை நமக்குத் தெரிந்த பல இடங்களிலும், தெரியாத ஏராளமான இடங்களிலும் சேகரம் செய்யப்பட்டுள்ளது.



இன்று Internet வந்துவிட்டது. எவரும் அதை அதிகபட்சம் பயன்படுத்தலாம். எல்லாவற்றையும் அதன் மூலம் அனைவருக்கும் தரலாம். 100 ஆண்டுகளில் சில மேதைகட்குப் பதிலாக இம்முறையால் ஆண்டிற்கு ஒரு மேதை உருவாவர். கல்வியின் எல்லா நுணுக்கங்களையும் அறிந்து, பெறுபவர் பெறும் அளவின் தரம் அறிந்து, கொடுக்கும் கருவியின் வீச்சையும் அறிந்து Web Course உருவாக்கப்பட்டால் ஆண்டுதோறும் அநேக மேதைகள் ஏற்படுவர். எந்தச் செயலுக்கும் குறைந்தபட்சம், அதிகபட்சம் உண்டு. இடைப்பட்ட நிலைகள் ஏராளம். 100 ஆண்டிற்குமுன் ஒரு பிரெஞ்சு சிந்தனையாளர் திருஷ்டியில் இந்த விஷயம் எழுந்தது. அவர் 3 கோடியே 70 லட்சம் மேதைகள் 4 துறைகளில் எழுவர் என்றார். அது அதிகபட்சமாக இருக்கும். மேதை என்பது யார்? எது மேதாவித்தனம்?

மனப்பாடம் செய்து பெறுவது அறிவு என்பது முதல் நிலையான ஒரு நிலை. அக்கறை, ஆர்வம், ஆசை எழுந்தால் கல் உடைப்பவன் சிற்பியாகிறான். படம் எழுதுபவன் ஓவியனாகிறான். வாயைத் திறந்தால் நாடோடிப் பாடல் பாடுபவன் கம்பன் போலக் கவிஞனாகவும், காளமேகம் போல புலவனாகவும் மாறுவான். ஆசை மனத்தின் வேகம். **ஆத்மாவின் வேகம் ஆர்வம் எனப்படும்**. ஒருவனுடைய ஆத்மா ஒரு கலையில் ஆர்வம் கொண்டால் அவன் மேதையாவான். அவனை மேதையாக்குவது சமூகம் பெற்ற ஞானம், திறமை மற்றும் அதன் ஸ்தாபனங்கள். இன்று இந்த வாய்ப்பை Web உலகில் அனைவருக்கும் வழங்க முடியும். அதையும் இலவசமாகவும் வழங்க முடியும். **அந்தப் பேறு பெறும் வழி பெருஞ்செல்வம் பெறும் வழியாகவுமாகும்**. கல்வியைப் பெற்ற சமூகம் கல்வியைத் தரும். செல்வத்தைப் பெற்ற சமூகம் செல்வத்தைத் தரும். கல்வி உயிரின் செல்வம். செல்வம் மனமும், உயிரும் பெற்ற ஞானம். இவை அடிப்படையில் இணைந்துள்ளன. லக்னோவில் சட்டக்கல்லூரியும், கலைக்கல்லூரியும் இணைந்து செயல்பட்டன. சட்டக்கல்லூரி தரும் பட்டம் L.L.B. கலைக்கல்லூரி தருவது M.A. இரண்டு பட்டங்களும் இரண்டாண்டில் பெறும் வசதியை

இரு கல்லூரிகளும் இணைந்து ஏற்பாடு செய்தன. அதே தத்துவப்படி கல்வியும், செல்வமும் சேர்ந்து பெறும் முறை **Learning while earning or earning while learning** ஆகும். மனிதன் மேதையாகலாம், பெருஞ்செல்வம் பெறலாம், இரண்டையும் சேர்த்துப் பெறலாம், ஏராளமாகவும் பெறலாம். லோகமாதாவுக்கு 4 அம்சங்கள் உண்டு என்றார் பகவான். மஹேஸ்வரி, மகாகாளி, மகாலட்சுமி, மகாசரஸ்வதி என்று அவற்றைக் குறிப்பிட்டார். அதுபோக மேலும் 8 அம்சங்களுண்டு. அவை சிருஷ்டியில் இன்னும் வெளிப்படவில்லை என்றார். அவை சிருஷ்டியில் வந்தால் மனிதனுக்கு அவற்றை வழங்குவது சமூகம். சமூகம் தாய், பாதுகாப்பு தரும், பண்பும் தரும், ஞானமும், கல்வியும், செல்வமும், நலமும் தவறாது வழங்கும் தாய். பெற்றோர், குறிப்பாக தாய் எந்த நேரமும் குழந்தைகள் நினைவாகவே இருப்பாள். **பிள்ளைகளுக்குப் பெற்றோர் நினைவு வராது**. சிறுவனானாலும், இளைஞனானாலும், வளர்ந்த நிலையிலும் மனிதன் தன் எதிர்காலத்தை உருவாக்கியபடியிருப்பான். பெற்றோர் அவனைப் பெற்று ஆளாக்கினர். அது அவர்கள் கடமை. **சுயநலமே இல்லாத பெற்றோர் பிள்ளைகளைச் சுதந்திரமாக வளர்த்தால், பிள்ளைகள் தங்கள் வாழ்வில் முன்னுக்கு வருவார்கள்.** பெற்றோர் நினைவே வராத பிள்ளைகள் சௌக்கியமாக, சந்தோஷமாக வாழ்ந்தால் பெற்றோர் சுயநலத்தின் சுவடேயில்லாதவர் என்று அறியலாம். அவர்கட்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமை தங்குதடையின்றித் தானே பூர்த்தியாகும். பிள்ளைகள் பெற்றோரிடம் பாசமாக இருந்தால் குடும்பம் பாசமான குடும்பம், நெடுநாள் பல தலைமுறைகளாகப் பண்பாக வாழ்ந்த குடும்பம் என அறியலாம். **நாம் சமூகத்தை நினைவு கூர்வதில்லை என்பதே சமூகம் சுயநலமற்ற தாய் என்பதற்கு அடையாளம்**. எழுதப் படிக்கத் தெரியாத தாய் குழந்தைக்கு உடல் நலம் பேணுவாள். நற்பழக்கங்களையும் நற்பண்புகளையும் தருவாள். தாய் படித்தவளாக இருந்தால் அவள் குழந்தைக்குச் செய்யக்கூடியது ஏராளம். தன்னைவிட மகள், மகன் அதிகமாகப் படிக்க வேண்டும் என முயல்வாள். செய்து முடிப்பாள். **தாயின் எண்ணம் தனயன் பெற்ற ஆசீர்வாதம்**.



தாய் நினைப்பது தானே முடியும். தாயார் முயல்வது தவறாது. அறிவுள்ள தாய், நல்லெண்ணமும், பண்பும் பெற்று இலட்சியமான திறமையுடையவளானால், மகனை அரசனாகவே உயர்த்த முடியும்.

**தாய்மை சிருஷ்டியின் திறமை.**

கென்னடிக்கு உடன் பிறந்தவர் 9 பேர். தகப்பனார் 9 மில்லியன் டாலர் சம்பாதித்தவுடன் சம்பாதிப்பதை நிறுத்திவிட்டு குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வருவதில் வாழ்நாளை செலவிட்டார். ''துறை எதுவானாலும், அங்கு முதன்மையாக வருவதே இலட்சியம்'' என்பது அவர் கொள்கை. அது பெரு முயற்சி, அரிய முயற்சி, பெற்ற பலன் பெரியது. சமூகம் தாய். பெற்றோர் பிள்ளைகட்கு ஒரு சிறு சமூகம். நாட்டில் உள்ள அத்தனை பெருமைகளையும் தாய் மகளுக்கோ, மகனுக்கோ பெற்றுக் கொடுக்க முயன்றதில் வெற்றி பெற்றவர் சிலரே எனினும், **அது சிறப்பான வெற்றி**. ஒரு ஜில்லா தலைநகரில் 150 வக்கீல்கள் இருந்தனர். அவர்களுள் 50 பேருக்கு மேல் வக்கீல் குமாஸ்தா, கோயில் குருக்கள் மகன்கள். அக்குடும்பங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கப்பட்டது பெரும்பாடு. அது பாடுபட்டு மட்டும் சாதிக்க முடியாது. **தாயன்பும் தகப்பன் பொறுப்பும் மகன் திறமையாக மலர தாய் தகப்பனுடன் ஊரும் உலகமும் சம்மதித்து ஆதரவு தர வேண்டும்**. ஒரு இளைஞன் படித்து, பட்டம் பெற்று, வாழ்வில் நினைப்பதை, அதுவும் வசதியற்ற குடும்பங்களிலிருந்து வரும் இளைஞர் வாழ்வை கவனித்தால் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தின் ஆதரவும், ஆமோதிப்பதும் எவ்வளவு அவசியம் எனத் தெரியும். ஏழை படித்தாலும், வேலைக்கு வந்தாலும் சமூகம் ஏற்க வேண்டும். அவனை ஏழையென ஏளனம் செய்தால் ஊரில் இருக்க முடியாது. ஊர் ஏற்பது கடினம். உலகம் உவந்தேற்பது இறைவனின் அருள். தாழ்ந்த ஜாதி மக்களில் பெரிய வேலைக்கு வந்தவர்கள் தங்கள் ஜாதியினரைச் சேர்ப்பதில்லை. எவர் சேர்த்தாலும் சேர்க்காவிட்டாலும் நம் ஜாதியில் உயர்ந்தவர், மற்றவரைச் சேர்ப்பதேயில்லை. அதைக் கருதும்பொழுது

சமூகத்தின் ஆதரவு, ஆசீர்வாதமாகும். சமூகத்தின் தாய்மை ஒருவகையில் இறைவனின் அருள். வாழ்வில் social status சமூக அந்தஸ்தே முக்கியம். முன்னுக்கு வந்தவர் வராதவரை ஆதரிக்க மாட்டார்கள். இலட்சியம் எனக் கருதி தாழ்ந்த ஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்தவருக்குக் குடும்பம் முழு ஆதரவு கொடுத்தது. திருமணம் ஆனபின் வீட்டில் சேர்க்கவில்லை. அவளுடனேயே போய் அவர் குடும்பம் நடத்த வேண்டியதாயிற்று. **சமூகம் எளிதில் ஆதரவு தராது. தருவது தாய்மை.**

ஆபத்திலிருந்து காப்பாற்றுவது அவசியம். ஆனால் அது ஆரம்பம். **சமூகத்தில் வாழத்தகுதியற்றவர், வசதி பெறாதவர், வசதியிருந்தும் அனுபவிக்க முடியாதவர், தனக்கு வருபவற்றைப் பிறர் அனுபவிப்பது கண்டும் சும்மா இருப்பவர்கள் ஏராளம்.** இதைக் கடந்து மேல் மட்டத்தில், பெருந்திறமை மற்றும் பெரிய நல்ல குணங்கள் அடையும் இலட்சியம் உள்ளவர் ஏராளமாக உண்டு. எதுவுமற்ற தாழ்ந்தவருக்கும் இதுபோன்ற சில உயர்ந்தவை இருக்கும். அன்னை அவற்றிற்குப் பலன் தருவார். அது அளவு கடந்த பெரியது. வாழ்வும் தரும். அது அடுத்தபடி. சமூகமும் ஏராளமாகத் தரும். அது அதைவிடச் சிறியது. **அந்த மிகச் சிறியதே நமக்கு மிகப் பெரியதாகும்.** கூலி வேலை செய்தவன் 158 கல்லூரி, பள்ளிகளை நடத்துவது அது போன்றது. சமூகம் தருவது நம் சமூக அந்தஸ்திற்குரிய நல்லதாகும். வாழ்வு தருவது நம் குண ராசிக்குரியதாகும். அன்னை தருவது ஆன்மாவின் அம்சத்திற்குரியதாகும். ஆன்மாவின் அம்சம் வேலைக்காரனுக்கோ, வேலைக்காரிக்கோ இருக்கும். வாழ்வின் அம்சம் கெட்ட பழக்கம் உள்ளவர்க்கிருக்கும். ஆன்மாவின் அம்சம் தேஜஸ் உள்ளவர்க்கிருக்கும்.

(தொடரும்)

### ஜீவிய மணி

**சக்தி பொங்கி வழிந்தால் சந்தோஷம் பொங்கி வழியும். சந்தோஷம் இருந்தால் சாதனை பெருகும்.**



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**31. தீராத பிரச்சனை:**

இறைவன் மனிதனுக்கு அவனால் தீர்க்க முடியாத பிரச்சனையைக் கொடுப்பதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனால் தீர்க்கக்கூடிய பிரச்சனைகளை மட்டுமே இறைவன் கொடுக்கிறான். ஆனால் மனிதன் அதிகபட்ச முயற்சி எடுத்து, முயன்றால் அவை தீரும். சாதாரண முயற்சியால் சாதாரணப் பிரச்சனை தீரும். தீவிர முயற்சியால் எந்தப் பிரச்சனையும் தீரும். பலர் முயன்று தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொண்டு முன்னேறுகிறார்கள். மற்றவர் அந்த முயற்சியை எடுப்பதில்லை. முயன்றோர்க்கு முன்னேற்றம் என்பது அன்னை பிரச்சனைகளைப்பற்றி சொல்லியிருப்பது.

ரூ.2000 மாத வருமானமும், ரூ.75,000 சொத்தும் உள்ளவர்க்கு இரண்டரை இலட்ச ரூபாய் கடனானால் அது அவரால் தீர்க்கக்கூடிய பிரச்சனை என்று எப்படிச் சொல்வது? அவரை மீறிய பிரச்சனை அல்லவா அது? மேற்படி நபர் நாணயமானவர். அவர் போட்ட திட்டம் (project) வெகு இலாபகரமானது. அவரது நாணயத்தாலும், திட்டத்தின் அதிகபட்ச இலாபத்தாலும் கடன் கிடைத்தது. தற்சமயம் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை; வட்டி சேர்ந்து பாரமாகிவிட்டது; விழி பிதுங்குகிறது என்ற நிலையில் கடைசியாக அன்னையால் ஏதாவது வழி பிறக்குமா என்று அரைகுறை நம்பிக்கையுடன் ஆசிரமம் வந்தார். மறுநாளே கழுத்தில் இருந்த கத்தி விலகியது. ஆனால் விழி பிதுங்கும் நிலை ஒன்றரை வருஷம் மாறவில்லை. எந்தச் சாதுர்யத்தைப் பயன்படுத்திக் கடனை முதலில் வாங்க முடிந்ததோ, அதே சாதுர்யத்தைப் பயன்படுத்தி நிலைமையைச் சமாளிக்க வேண்டும் என்ற சவால் அவருள்ளிருந்து எழுந்தது. அதன்பின் பிரார்த்தனை பலித்தது. புதிய நிலைமை சாதகமாக ஏற்பட்டது. உயிரை விட்டுச் செய்த முயற்சியால் திட்டத்தை வெற்றிப்

பாதைக்கு மாற்றிவிட்டார். நிலைமைக்கு மீறிய கஷ்டத்தை உற்பத்தி செய்தவர்கள் தங்களுக்கு உள்ள சாமர்த்தியம், சாதுர்யம், நாணயம், செல்வாக்கு, சிபாரிசு ஆகிய முழு முயற்சியுடன் தம் முழுமூச்சுடன் செயல்பட்டு அந்தக் கஷ்டத்தை உருவாக்கியிருப்பார்கள். முயற்சி பெரியது. அறிவு இல்லாமல் ஆசையால் உந்தப்பட்டு ஒரு நிலைமையை ஏற்படுத்தி விடுவார்கள். பின்னர் பிரச்சனை வடிவம் பெற்று, உயிர் பெற்று, வேரூன்றி, தீர்க்க முடியாது என்றாகிவிட்டால், அப்படியே போட்டு விட்டு ஓடிவிடலாம் என நினைப்பார்கள்; ஓடிவிடுவார்கள். எப்படி முழுமூச்சோடு நிலைமையை உருவாக்கினார்களோ, அந்த முழுமூச்சுடன் நிலைமையைச் சமாளிக்க முயன்றால், பிரச்சனை தீரும். அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனை பலிக்கும்.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் உள்ளவர், இப்படிப்பட்ட முடிவை எடுத்துவிட்டால், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண பல வழிகள் உள்ளன. அப்படிப்பட்ட முயற்சியை எடுக்க முடிவு செய்தபின் செய்யும் பிரார்த்தனை பூரணமாகப் பலிக்கும். முயற்சியைச் செய்வதற்கு முன்னும் பலிக்கும். இந்தக் கோணத்தில் பார்த்தால், தீர்க்க முடியாத பிரச்சனை, தீராத பிரச்சனை என்று ஒன்றில்லை எனலாம்.

இந்த முடிவை நிறைவேற்ற உதவும் முறைகள் பல. அவையாவன:

1. தவறு என்னிடம் இருக்கிறது. நான் திருத்திக்கொள்கிறேன் என்ற முடிவை ஏற்றுக்கொள்ளுதல்.
2. இதுவரை நான் செய்த முயற்சிகளைவிட அடுத்த கட்டத்தில் ஒரு முயற்சியைச் செய்ய நான் தயார்.
3. இதுவரை என்னால் விடமுடியாத குறையை நான் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக விட்டுவிட முடிவு செய்து விட்டேன்.
4. இன்று செயல்படும் கட்டத்தில் (perfection) பூரணச் சிறப்பை அடைய முயல்வேன்.
5. முயன்றால் முடியாதது ஒன்றில்லை என்ற நம்பிக்கை இருக்கிறது. பிரச்சனை தீரும்வரை விடாமுயற்சி செய்வேன்.



6. மற்றொருவரால் இதுபோன்ற பிரச்சனையைத் தீர்க்க முடியுமானால், என்னால் அது முடியும்.
7. பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய இரகஸ்யம் ஒன்று உண்டு. அதைக் கண்டுபிடிக்க முயல்வேன்.
8. நாம் நம்பும் கருத்துகளின் எதிர்மறையானவையும் (**opposite ideas**) உண்மை என நான் ஏற்றுக்கொள்கிறேன்.
9. முயற்சி செய்யாமல் அழிவதைவிட, முயற்சி செய்து தோல்வி அடைதல் சிறப்பு.

**1. தவறு என்னுடையதே:**

இந்தக் கொள்கை சிறப்பானது. என் மீது தவறில்லை எனும்போது செயல்படுவது அகந்தை. நான் எனும் முனைப்பு, அகங்காரம். தவறு என்னுடையதே என்று சொல்லியவுடன் அகந்தை அகற்றப்படுகிறது. அத்துடன் நம் திறமைகள் எல்லாம் அகந்தையின் பிடியிலிருந்து விலகி, பிரச்சனையைத் தீர்க்க தங்கள் வலுவை நமக்குக் கொடுக்கின்றன. இது பெரிய விஷயம்.

''தவறு என்னுடையது மட்டுமே. எல்லாத் தவற்றுக்கும் நானே பொறுப்பாளி. திட்டம் (project) கூடிவரவில்லை என்றால் தவறு இருக்கிறது என்று பொருள். அப்படி இருக்கும் தவற்றுக்கு முழுப் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன்'' என்று கூறி முதல் போட்ட கூட்டாளியிடமிருந்து விலகிய கஷ்டக் கூட்டாளிக்கு, 10-ஆம் நாள் முழுத்திட்டமும் (project) தானே திரும்ப வந்தது. இந்தக் கொள்கைக்குரிய திறன் அத்தகையது.

''தவறு என்னுடையது என்று ஏற்றுக்கொண்டேன். திட்டம் (project) வந்துவிட்டது. ஆனால் கூட்டாளி செய்த துரோகத்தை நினைத்தால் இன்றும் ஆத்திரம் பொங்கிவருகிறது. கோபம் வருவது தவறு. இனி என் கோபத்தை அழிக்க முற்படுவேன்'' என்று சபதமிட்டு கோபத்தை முழுவதுமாக அடிக்கடி நான்காண்டுகள் முயன்று வெற்றி கிட்டிய அதே க்ஷணத்தில், துரோகம் செய்த கூட்டாளி அவரை அழைத்து, ''நடந்ததெல்லாம் சரியில்லை. நீங்கள் செய்தது அனைத்தும் சரி. ஆரம்பத்திலிருந்தது போல் நாமிருப்போம்'' என்று கூறி நட்பை அளிக்க முன்வந்தார்.

2. **இதுவரை செய்யாத முயற்சியை நான் செய்ய ஏற்றுக் கொள்கிறேன்:**

S.S.L.C.யை எட்டினால் போதும், நம் வீட்டுப் பையன் S.S.L.C. பாஸ் செய்ய முடியாது என திட்டவட்டமாக நம்பிய குடும்பத்தில் அவர்கள் வீட்டுப் பையன் S.S.L.C.யை மூச்சைப் பிடித்துக்கொண்டு பாஸ் செய்து, இன்டர்மீடியட் சேர்ந்து 3 முறை தவறி, 4-ஆம் முறை 35 மார்க்குடன் பாஸ் செய்தான். அவனை B.A. (Hons.) சேர வேண்டுமென சொன்னபொழுது அவனுக்குப் பீதி ஏற்பட்டது. B.A. (Hons.) மூலம் 4 வருஷ M.A. படிப்பை 3 வருஷத்தில் முடிக்கலாம். ஆனால் பரீட்சை ஒரே ஒரு முறைதான் எழுதலாம். பெயிலானால் மீண்டும் இன்டர்மீடியட்தான் நிலைக்கும். B.A. (Hons.) அட்மிஷன் வாங்குவது கஷ்டம். தான் இதுவரை அசுரப் பிரயத்தனம் செய்துவருவதால் இதைவிட அதிக முயற்சிக்கு இடம் இல்லை எனப் பையன் பின்வாங்கினான். ''நீ செய்த முயற்சி அளவு கடந்தது, சரி. ஆனால் முயற்சியின் தரத்தை (quality) உயர்த்தினால் பலனுண்டு. முயற்சியின் அளவை (quantity) இனி உயர்த்த முடியாது. இதற்கு நீ சம்மதித்தால் நல்ல எதிர்காலம் உண்டு'' என்ற அறிவுரையை அவன் ஏற்றுக்கொண்டான். B.A. (Hons.) முதல் நிலையில் (I class) பல்கலைக்கழகத்தில் முதல்வனாகத் தேறி, M.Litt.-ம் பெற்று வெளியே சென்று, மீண்டும் M.A.-யும், Ph.D.-யும் பெற்று பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் ஆனான்.

இன்றுவரை உள்ளதைவிட உயர்ந்த நிலை ஒன்றுண்டு. அதை அடையச் செய்யும் முயற்சிக்கு உள்ள பலனைக் கனவிலும் நாம் கருத முடியாது. அப்படிப்பட்ட முயற்சியே அன்னை வழிபாடு. அன்னையை வழிபட அதைவிடச் சிறந்த முறைகளில்லை. அன்னார் வாழ்வில் அன்னை அளவிறந்து செயல்படுவார்கள். வாழ்வே வழிபாடு ஆகும்.

தொடரும்...



# அன்பர் அனுபவம்

கல்யாணி, சென்னை.

அன்னையின் அன்பர் கல்யாணி நன்றிகளுடன் எழுதிக் கொள்வது. அன்னையின் அருளால் என் வாழ்வில் நானும் என் உறவினர்களும் பெற்ற பெரும்பாக்கியங்கள் பற்பல. சிலவற்றை மட்டும் குறிப்பிடுகின்றேன். தனியார் பள்ளியில் ஆசிரியையாக 1500/- ரூபாய் பெற்று பணிபுரிந்து வந்தேன். அன்னையை அறிந்த ஒரு மாதத்திற்குள் TNPSC - IV Group-இல் select-ஆகி கும்பகோணம் Commercial Tax Office-இல் Junior Assistant-ஆக 2000-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சேர்ந்தேன். பின்பு இரு வருடங்களில் மனையும் வாங்கி உடனே வீடும் கட்டினோம். அதன்பின் அடுத்த வருடமே TRB Selection-இல் select-ஆகி Teacher Educator என்ற பணியில் சேர்ந்தேன். பின்பு ஒரு வருடத்தில் அரவிந்தன் என்ற ஒரு ஆண் குழந்தைக்கும் அன்னையின் அருளால் தாயானேன். இவைகள் அனைத்தும் அன்னையின் அருளால் மட்டுமே எங்களுக்குக் கிடைத்தது. எங்கள் குடும்பத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இவைகள் அனைத்திற்கும் நாங்கள் அருகதை இல்லாதவர்கள். அன்னைதான் இவைகள் அனைத்தையும் எங்களுக்குக் கொடுத்தார்.

எனக்கு சித்தப்பாவின் மகன் ஒருவர் இருக்கிறார். அவருக்கு தாய், தந்தை இருவருமே கிடையாது. அவருக்கு அன்னையின் அருளால் நல்ல இடத்தில் பெண் பார்த்து சிறப்பாக திருமணமும் செய்து வைத்தோம். நானும் என் கணவரும் மணவறையில் தாய்-தந்தையர் என்ற இடத்தில் இருந்து முடித்து வைத்தோம். இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், எங்கள் குடும்பத்தில் எங்களைவிட பல பெரியவர்கள், மூத்தவர்கள், வசதியானவர்கள், நெருக்கமான உறவினர்கள் உள்ளனர். இந்த நல்ல காரியத்தை நாங்கள் செய்யும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

பின்பு திருச்சியில் ஒரு மனை வாங்கினோம். எங்கள் மூலம் அன்னை அன்பர்கள், உறவினர்கள் என மொத்தம் ஐந்து பேர்களும் அவ்விடத்தில் மனை வாங்கினோம். அந்த இடத்தின் உரிமையாளர் எங்களுக்கு மிகவும் நெருக்கமானவர். ஆகையால்

அவர் மூலமே என் கணவருக்கும், என் அக்காவின் கணவருக்கும் நல்ல வேலையும் வாங்க முடிந்தது. இதனால் கஷ்டப்பட்ட என் அக்காவின் குடும்பமும் இப்பொழுது நல்ல நிலையில் உள்ளது. மேலும் என் கணவரின் தம்பிக்கும் அயல்நாட்டில் வேலை வாங்கியும் தந்தோம். அவரை வேலை இல்லாதவர் என்று அனைவரும் கூறி வந்தனர். அந்த அவப்பெயர் நீங்கி அவரும் அவர் இரண்டு குழந்தைகளும் தற்சமயம் நல்ல நிலையில் உள்ளனர். இவைகள் அனைத்தும் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் நடந்தது. இவ்வளவும் என்னால் செய்யப்படவில்லை. அன்னைதான் செய்தார் என்பதில் ஐயமே இல்லை.

மேலும் தற்சமயம் நான் **M.A.** ஆங்கிலமும் **promotion** வேண்டி படித்து வருகிறேன். என் கணவர் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் செயலாளராக உள்ளார். அவரின் வருமானம் குறைவாக உள்ளது. அவர் 1985-லிருந்தே இந்த வேலையைச் செய்து வருகிறார். தற்போது அவரின் வயது 48 ஆகிறது. அவர் பணியில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதையும் அன்னையிடம் கூறி வெளிநாடு செல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தருமாறு பிரார்த்தனை செய்து வருகிறேன். அன்னையின் அருளால் அதுவும் நிறைவேறும் சூழ்நிலையும் அமைந்துள்ளது. அவருக்கு நல்ல வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இவ்வளவு நன்மைகளையும் அன்னை மற்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தர் மட்டுமே எங்களுக்கும் எங்கள் உறவினர்களுக்கும் செய்துள்ளார்கள். இன்னமும் செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

ஸ்ரீ அன்னைக்கும் பகவானுக்கும் நன்றிகள் ஆயிரம்.

## ஜீவிய மணி

*'நான்' இருந்தால் நாம் உடனே நேர் எதிராக மாற வேண்டியது அவசியம்.*



## அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(ஆகஸ்ட் 2014 இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

*சென்ற அத்தியாயத்தில் ...*

*பூரணி ஆன்மீக லட்சியங்களும், நல்ல குணங்களும் கொண்ட இளம்பெண். அவளது தாய் செல்வத்தையும், செல்வாக்கையும் பொதுவாக பெண்கள் செல்ல விரும்பாத வழியில் சென்று ஏராளமாக சம்பாதித்தவள். தன் பிரிய மகளான பூரணியும் செல்வத்தோடும், செல்வாக்கோடும் வாழ வேண்டும் என நினைக்கிறாள். ஆனால் தாயின் வார்த்தைகளை பூரணி ஏற்க மறுக்கிறாள். தன் வாழ்வின் பொருளை அறியும் ஆன்மீக ஆர்வம் பூரணியின் இதயத்தில் காட்டுத்தீயாகப் பற்றி எரிகிறது. ஒரு மழை நாளில் அறிமுகமில்லாத வாலிபனுக்கு உதவுகிறாள். அவனோடு காரில் பயணம் செய்யும்போது தன் ஆன்மீக ஆர்வத்தைப் பற்றி அவனிடம் பேசுகிறாள். இனி...*

***

### 18. துரியபுத்திரனின் பார்வை

என் பெற்றோர் எனக்கிட்ட பெயர் துரியபுத்திரன் அல்ல. நான் மறுபிறவி எடுத்ததாக உணர்ந்த தினம் என் பெயரை துரியபுத்திரனாக நானே மாற்றிக் கொண்டுவிட்டேன்.

எந்த யோக சாதனையும் மறுபிறப்பு எடுப்பதுதான். மனோமயமாகிவிட்ட சாதாரண ஜட வாழ்விலிருந்து உயர்ந்த அசாதாரணமான ஆன்மீக போதத்தில் நுழைவது மறுபிறப்பின்றி வேறென்ன? ஆன்மீக வாழ்வு அவசியம் என்று உறுதியாக நம்புகிற எவருக்கும் யோகம் அழைப்பு விடுத்து தன் கதவுகளை அகலத் திறந்து வரவேற்று மறுபிறப்பு தரும்.

யோக மாளிகையின் முகப்பறை நோக்கிய முதல் பயணத்திற்கான அழைப்பும், பாதையும் அவரவர் சுபாவத்திற்கேற்றபடி அமைகின்றன. அனைவருக்கும் பொதுவான வழி என்று எதுவுமில்லை. இயல்பான அகவளர்ச்சி மூலம் எதுவும் அறியாமலே யோகத்தை நாடலாம். மதம், தத்துவம், மனத்திற்கு

பிடித்த மனிதர் தரும் அகத்தூண்டல் யோக அழைப்பாக மாறலாம். பக்கத்திலிருக்கும் யோகியோடு பழகிக் கொண்டே இருப்பதாலோ, தொலைவில் இருப்பவரைப் பற்றி நினைத்துக் கொண்டே இருப்பதாலோ, காதில் விழுந்த ஒற்றை சொல்-லாலோ, பல்லாயிரம் பக்கங்களை வாசித்து யோசித்ததாலோ, மின்னலென வாழ்வு தந்த அதிர்ச்சியாலோ, மலரிதழ் விரிவது போல மெல்ல மெல்ல பெற்ற அனுபவத்தாலோ ஆன்மீக ஆர்வம் உண்டாகலாம். ஒரே ஒரு சொல், ஒரே ஒரு செயல், ஒரே ஒரு எண்ணம் கூட அழைப்பிற்குக் காரணமாக ஆகலாம். அதையே பூரணியிடம் கூறினேன்.

யோகப்பாதையில், ஆன்மீகவழியில் தான் செல்ல ஆர்வம் கொண்டிருப்பதாக பூரணி போன்ற இளம் பெண்ணொருத்தி கூறியதைக் கேட்டு திகைத்தேன். ‘அழைப்பு எந்த ரூபத்திலும் வரலாம். அதை ஏற்று ஆன்மீக வாழ்விற்காக பூரணமாக சுயார்ப்பணம் செய்பவர் மட்டுமே பாதையில் தொடர்ந்து செல்ல முடியும். அந்த சுயார்ப்பண கணம் மானுடத்தின் மகத்தான கணம். அதைச் செய்யாவிட்டால் முழு வெற்றி கிடைக்காது. பல நாட்கள் தியானம் செய்வதாலோ, பல நூறு கருத்தரங்குகளில் பங்கெடுப்பதாலோ, ஆயிரமாயிரம் பக்கங்-களை அறிவுபூர்வமாகக் கற்று எழுதுவதாலோ முன்னேற்றம் வந்துவிடாது. எதை நாடுகிறோமோ அது மட்டுமே சுவாசக்-காற்றாக, இதயத்துடிப்பாக மாற வேண்டும். இறைவனை நாடுபவர் இறைவனை மட்டுமே நினைத்து, இறைவனை மட்டுமே உணர்ந்து, இறைவனுக்காக மட்டுமே செயல்பட்டு, இறைவனுக்காகவே வாழ வேண்டும்’ என்றேன்.

‘அப்படி வாழ்ந்தால் இறைவனாகவே மாறி விடலாம். காதலன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த காதலி கதவோடு சேர்ந்து கதவாகவே மாறிவிட்டாளாம்’ என்று கூறி சிரித்தாள் பூரணி.

‘உடனே புரிந்து கொண்டுவிட்டீர்கள். ஆணைவிட பெண்ணுக்கு யோகம் செய்யும் பக்குவம் அதிகமாக இருக்கிறது’ என்றேன்.



‘அதனால்தான் ஆண்கள் பெண்களை யோகம் செய்யக் கூடாது என்கிறார்களோ?’ என்றாள் பூரணி. ‘சிலகாலமாகவே ஆன்மீக சிந்தனைகள் எழுந்தாலும், இன்று காலையில்தான் ஆன்மீக வழியில் மட்டுமே என் வாழ்க்கையைச் செலுத்த வேண்டும் என்று முடிவெடுத்தேன். அந்தத் தீர்மானம் மனதை நெகிழ வைத்தது. உங்கள் சந்திப்பு என் முடிவை ஆசீர்வதிப்பது போலிருக்கிறது.’

‘தீவிரமான தாக்கத்தால் திடீரென யோகத்தை நாடியிருந்-தாலும், ஆர்வமும், தீர்மானமும், சுயார்ப்பணமும் முழுமையாக இருந்து விட்டால் ஆன்மீகப் பயணத்திற்குத் தடையெதுவும் இருக்காது. பூரணி, நீங்கள் ஏற்கனவே ஆன்மீகப் பாதையில் காலடி எடுத்து வைத்து விட்டீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது’ என்றேன்

‘எனக்கு அப்படித் தோன்றவில்லை. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கிறேன்’ என்றாள் பூரணி.

‘ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும். மனித குருவை இன்னும் சந்திக்கவில்லை என்றாலும் ஆர்வமுள்ள மனிதரை அககுரு விழிப்போடு வழி நடத்துவார்’ என்றேன்.

‘ஆனால், என் சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆன்மீக ஆர்வத்திற்கு எதிரானவையாக இருக்கின்றன’ என்றாள் பூரணி.

‘தீவிரமான ஆன்மீக அனுபவம் கிடைத்துவிட்டால், அதன்பின் உங்கள் பயணத்தை எந்த சந்தர்ப்பத்தாலும் எந்த சூழ்நிலையாலும் தடை செய்ய முடியாது. கேள்விகள் எழுந்தால்-தான் ஆர்வம் பிறக்கும். ஆர்வமிருந்தால்தான் பாதையைத் தீர்மானிக்க முடியும். முடிவெடுத்தபின்தான் சுயார்ப்பணம் செய்ய முடியும். சுயார்ப்பணம் செய்யும்போதுதான் ஆன்மீக அனுபவங்கள் உங்களைத் தேடிவரத் தொடங்கும். அகம் இடைவிடாமல் முயன்றால் சுபாவத்தின் தடை கூட விலகி-விடும். சூழ்நிலைத் தடைகள் நீரலையில் தோன்றும் நீர்க்குமிழி-களைப் போல மிகச் சிறியவை, தற்காலிகமானவை’ என்றேன்.

‘ஆன்மீக முயற்சியின் முதல் படியில் நிற்பவர்கள் எல்லோரும் என்னைப் போலத்தான் இருப்பார்களா?’ என்று கேட்டாள் பூரணி.

‘உங்களுக்குச் சட்டென அமைந்தது போன்ற தீவிர ஆர்வம் எல்லோருக்குமே கிடைக்கும் என்று கூற முடியாது. பெரும்பாலானோருக்கு முதல் அழைப்பிற்கும், முழு ஏற்பிற்கும் இடையே பலகாலம் கழிந்து விடும். அறிவால் ஆன்மீகத்தை ஆராய்பவர்களுக்கும், யோகியின் மீது கொண்ட பிரியத்தால் மட்டுமே ஆன்மீகத்தை ஏற்பவர்களுக்கும் சமர்ப்பணம் கூடி வர நீண்ட காலமாகும். சிலருக்கு அது கூடி வராமலே போய் விடும். பல அனுபவங்கள் கிடைத்தாலும், சமர்ப்பணத்தை பலிக்க வைக்கும் அடிப்படையான அனுபவம் கிடைக்காமல் போய்விடும். யோகத்தில் வீழ்ச்சியோ, தேக்கமோ ஏற்படலாம்’ என்றேன்.

‘நான் தோல்வி அடையவும் வாய்ப்புண்டு என்கிறீர்களா?’ என்று கேட்டாள் பூரணி.

‘யோகத்தில் தோல்வி என்பதே இல்லை. சிறிய வெற்றி, பெரிய வெற்றி, பூரண வெற்றி ஆகியவைதான் உண்டு. யோக வீழ்ச்சி சிறிய வெற்றி. ஆதாரத்தில் மிகப் பெரிய குறை இருந்தால், யோகத்தைத் தவிர பிறவற்றிலும் ஆர்வமிருந்தால், சமர்ப்பணம் முழுமையற்றதாக இருந்தால் சிறிய வெற்றி மட்டும் கிடைக்கும். எந்த யோக முயற்சியும் வீணாவதே இல்லை. அரைகுறை முயற்சியால் இன்று பலன் கிடைக்காமல் போனாலும், எதிர்காலத்தில் அதற்கான பலன் நிச்சயம் கிடைக்கும்’ என்றேன்.

‘நான் யோகத்தை ஏற்கலாம்தானே?’ என்று கேட்டாள் பூரணி.

‘என்ன கேள்வி இது! வாழ்வு தரும் வாய்ப்புகளில் ஆகப் பெரிய வாய்ப்பு யோகம் செய்வது. அதைவிடப் பெரிய பரிசோ, வாய்ப்போ மனிதருக்குக் கிடைக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். அழைப்பு கிடைத்தவர்கள் எல்லோருமே யோகத்தை ஏற்பதில்லை. சிலர் பல அழைப்புகளுக்குப் பின்



ஏற்பதுண்டு. ஏற்றவர்கள் அனைவருமே யோகத்தை முடிப்பார்கள் என்றும் சொல்ல முடியாது’ என்றேன்.

‘யோகத்தில் பூரண வெற்றி பெற குறுக்கு வழியோ, ரகசியமோ தெரிந்து வைத்திருக்கிறீர்களா?’ என்று கண்களில் சிரிப்புடனும், இதழ்களில் புன்னகையோடும் கேட்டாள் பூரணி.

‘குறுக்கு வழி பூரண சுயார்ப்பணம். ரகசியம் யோகத்தை வாழ்வில் ஒரு லட்சியமாக நினைக்காமல், ஒரே லட்சியமாக நினைத்து, மொத்த வாழ்வையும் யோகமாக ஏற்பது’ என்றேன்.

‘மழையின் வேகத்தால் கார் மெல்லத்தான் நகர முடிகிறது’ என்றாள் பூரணி.

‘பூரணயோகம் நகருவதைப் போல’ என்றேன்.

‘பலவகை யோகமார்க்கங்களை, தத்துவமுறைகளைப் பற்றி வாசித்துக் கொண்டிருந்தபோது பூரண சிந்தனை பற்றியும் வாசிக்க நேர்ந்தது. சமீபத்தில் ஸ்ரீ அரபிந்தோ பற்றி சிறிது வாசித்தேன். அவருடைய யோகம்தானே பூரண யோகம்?’ என்றாள் பூரணி.

‘ஆமாம்’ என்றேன்.

‘அவர் எழுதியதை வாசித்து வரும்போது, மௌனம் என்னை எப்போதும் சூழ்ந்திருப்பது போன்ற உணர்வு இருக்கும். பொருட்களும், மிருகங்களும், நிகழ்ச்சிகளும், மனிதர்களும் என்னிடம் மௌனமாக பேசி உறவாடுவதுபோல தோன்றிக் கொண்டே இருக்கும். அம்மா யாகமும், பூஜையும் செய்ய அடிக்கடி யோகிகளையும், சாமியார்களையும் வீட்டிற்கு வரவழைப்பார். அப்படி வந்த ஒரு யோகி ‘ஸ்ரீ அரபிந்தோ பெரிய யோகிதான். ஆனால் காலாவதியாகிவிட்ட விக்டோரியா காலத்து ஆங்கில நடையில் சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பார். அவர் சொன்னதெல்லாம் வேதங்களிலும், உபநிஷதங்களிலும், கீதையிலும் உள்ளதுதான். புரிகிற, எளிய நடையில் எழுதப்பட்ட ஆன்மீகப் புத்தகங்களை வாசித்தால் போதும்’ என்றார். அந்த யோகி சொன்னதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. கடினமான, செறிவான விஷயங்களைப் பற்றி எத்தனை எளிமையாக

எழுதினாலும், அது கடினமான, செறிவான மொழியில்தான் இருக்கும். புரியும்வரை மீண்டும் மீண்டும் வாசிப்பதுதானே நல்ல வாசகருக்கு அழகு?' என்றாள் பூரணி.

'ஆமாம்' என்றேன்.

'என் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட யோகி 'பூரண சிந்தனையைப் பற்றித் தெரிந்து கொள்ளத்தான் வேண்டு-மென்றால் நவீன காலத்து கென் வில்பர் போன்றவர்கள் எழுதியதைப் படி. நான் கூட இந்திய யோகத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி இருக்கிறேன்' என்றார். அவர் சிபாரிசு செய்தவர்கள் எழுதிய குட்டி தலையணை போலிருந்த புத்தகங்களை வாங்கி வாசித்தேன். ஒன்றில் கூட என்னால் வாழ்வனுபவத்தைக் காண முடியவில்லை. எல்லாமே வெறும் சொற்குவியல்களாக இருந்தன. அந்த மனிதகுல முன்னோடி-களைக் குறை கூறவில்லை. எனக்குப் புரியவில்லை. என் அறிவு அவ்வளவுதான். அதன்பின் ஸ்ரீ அரபிந்தோவும், விவேகானந்தரும் எனக்குப் போதும் என்று முடிவெடுத்து-விட்டேன். எப்போதாவது ராமலிங்க வள்ளலாரின் பாடல்களை வாசிப்பேன்' என்றாள் பூரணி.

'ஒரு மேதை மீண்டும் மீண்டும் ஒரே விஷயத்தை எழுதுவது போலத் தெரிவது தோற்றமே. எந்த சந்தர்ப்பத்தில் ஏன் அப்படி எழுதுகிறார் என்பதை ஆர்வம் தீவிரமாக உள்ள வாசகன் ஒரு கட்டத்தில் சட்டெனப் புரிந்து கொள்வான். அதன்பின் எல்லாமே எளிமையாக இருக்கும். என்ன, அதற்குப் பயிற்சியும், சிறிது கால அவகாசமும் வேண்டும்' என்றேன்.

'சிறுகதை ஒன்றில் படிப்பில்லாத ஏழைப்பையன் காரோட்ட கற்றுக் கொள்ள முயற்சிக்கிறான். உரிமம் வாங்கி விட்டால் வேலைக்குச் சேர்ந்து வயிறு நிரம்ப சாப்பிடலாம். அதுதான் அவன் லட்சியம். ஏழை என்பதால் பயிற்சியாளர் அலட்சியமும், அவமானமும் படுத்தி எடுபிடியாக நடத்துகிறார். காரோட்ட அடிப்படையாகத் தெரியவேண்டியது ஆக்சிலேட்டரையும், கிளட்சையும் இரண்டு கால்களாலும் எப்போது எந்த விகிதத்தில் அழுத்தம் கொடுத்து மிதிக்க வேண்டும் என்பது. அதுமட்டும் பையனுக்குப் பிடிபடுவதே இல்லை. மீண்டும் மீண்டும்



சொல்லித் தரும் பயிற்சியாளர், பையனை அடிக்கவும் செய்கிறார். அப்போதும் கார் நின்று நின்று நகருகிறது. இனி வாழ்ந்து என்ன பயன் என்று விரக்தி அடைகிறான் பையன். ஒரு சமயம் காரோட்டும்போது காவலர் எதிரே வருகிறார். பஸ் வருகிறது. பக்கங்களில் லாரியும், காரும் வருகின்றன. ஆபத்து. பையனின் மனம் கணநேரம் திகைக்க, கைகள் தாமாக சரியான கியரைப் போடுகின்றன. கால்கள் தாமாகவே சரியாக ஆக்சிலேட்டரையும், கிளட்சையும் மிதிக்கின்றன. அந்த கணத்தில் சூட்சுமம் பிடிபட்டு பையன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான்' என்றாள் பூரணி.

'வாழ்வைப் புரிந்து கொள்வது பூரண யோகத்தில் அடிப்படையான முயற்சி. அது உங்களுக்கு இயல்பாக வருகிறது. பூரணி, உங்களைச் சந்தித்தது என் அதிர்ஷ்டம் என்றுதான் நினைக்கிறேன். நான் பல வருடங்களாக ஸ்ரீ அரபிந்தோவின் புத்தகங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்து வருகிறேன். பொன்னொளிபுரம் வருபவர்கள் பணம் வேண்டும், வேலை வேண்டும், கல்யாணம் வேண்டும் என்று எளிய லௌகீக கோரிக்கைகளைப் பற்றித்தான் பேசுவார்கள். யோகத்தையும், தத்துவத்தையும் பற்றிப் பேச எனக்குக் கிடைத்த முதல் மனிதப் பிறவி நீங்கள்தான்' என்றேன்.

சிரித்தாள் பூரணி. 'நான் பல யோகங்களையும் பற்றிப் படித்திருக்கிறேன். ஆனால் குருவின்றி பயிற்சி செய்யக் கூடாது என்பதால் எதையும் செய்ததில்லை. தானே வழி பிறக்கும் என்று காத்திருந்தேன்' என்றாள் பூரணி.

'எதையும் ஏற்கும் துணிவிருந்தால், நெஞ்சில் பரமனே குருவாக இருப்பதாக நினைத்துக் கொண்டு பூரணயோகத்தை ஆரம்பிக்கலாம். ஆர்வம் உண்மையாக இருந்தால் அவர் வழி நடத்துவார்' என்றேன்

'பூரண யோகத்தை எனக்கு நீங்கள்தான் சொல்லித் தர வேண்டும்' என்றாள்.

'சொல்லித் தருவதா? சேர்ந்து கற்போம். ஒன்று சேர்ந்து பயணம் செய்வோம். ஒன்றாக அமர்ந்து விவாதம் செய்வோம். நம் மனங்கள் ஒன்றாகட்டும். தேவர்கள் பலியாகப் பெற்றதை

பகிர்ந்து கொள்வார்கள். நாம் அன்றாடம் கற்றதைப் பகிர்ந்து கொள்வோம். நம்மிடையே தூய நட்பு உருவாகட்டும்' என்றேன்.

'வேதத்திலுள்ள சத்சங்க பாடலை உங்கள் வசதிக்கு மாற்றி விட்டீர்கள்!' என்று கூறிச் சிரித்தாள் பூரணி.

இவள் விவரம் தெரிந்ததால் அடக்கத்துடன் இருக்கிறாள். கவனமாகப் பேச வேண்டும்.

'பூரண யோகம்! அதை எப்படி ஆரம்பிப்பது?' என்று கேட்டாள் பூரணி.

'முதலில் தத்துவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? என்று கேட்டேன்.

'அதைப் பின்னொரு நாள் தெரிந்து கொள்கிறேன். இப்போது நடைமுறையில் பூரண யோகத்தை எப்படிச் செய்வது என்று கூறுங்கள்' என்றாள் பூரணி.

'பெண்!' என்றேன்.

புன்னகைத்தாள் பூரணி. 'சரி, தத்துவத்தைச் சுருக்கமாக சொல்லிவிட்டு, பயிற்சி முறையை விளக்கமாகச் சொல்லுங்கள்' என்றாள்.

'இரண்டையுமே சுருக்கமாகத்தான் சொல்ல முடியும். வாழ்நாள் முழுவதும் கல்வியும், பயிற்சியும் தொடர்ந்திருக்க வேண்டிய யோகமிது. உலகில் பரிணாம வளர்ச்சி நடந்து கொண்டே இருக்கிறது. கல்லிலிருந்து தாவரத்திற்கும், தாவரத்திலிருந்து விலங்கிற்கும், விலங்கிலிருந்து மனிதனுக்கு-மாக வளர்ச்சி நடக்கிறது' என்றேன்.

'டார்வின் சொன்னதும் பரிணாம வளர்ச்சிதானே!' என்றாள் பூரணி.

'அவர் உயிரினங்களின் உடல் பரிணாமத்தை ஆராய்ந்தார். ஆழ்கடலிலிருந்த உயிரினம் படிப்படியாக மாறி குரங்காகி, பின் மனிதனாக மாறியது என்பது உடலின் பரிணாம வளர்ச்சி பற்றிய அவர் கருத்து. பூரணயோகத்தின் பரிணாமக் கொள்கை கான்ஷியஸ்னஸ் என்று அழைக்கிறோமே அந்தச் சித்தத்தின்,



போதத்தின் பரிணாமத்தைப் பற்றியது, ஆன்மீகப் பரிணாமத்தைப் பற்றியது' என்றேன்.

'கதையொன்றில் உயிரியல் விஞ்ஞானி ஒரு குரங்கிற்கு மனிதனைப் போல பேச, நடக்க, பழக பயிற்சி தருகிறான். குரங்கு அழகாக உடையணிந்து, வண்டி ஓட்டி, வீடுவீடாகச் சென்று, ஆங்கிலத்தில் பேசி கம்ப்யூட்டர் விற்கிறது. உலகமே திகைக்கிறது. ஒருநாள் பெரிய விற்பனையை முடித்துவிட்டு கிளம்பும்போது குரங்கு பெரிய மரத்தையும், அதில் பழங்-களையும் பார்க்கிறது, தன்னை மறந்து மரத்தில் பாய்ந்தேறி, பழங்களைப் பறித்துக் கொண்டு, சந்தோஷமாக கிளைக்குக் கிளை தாவிச் செல்கிறது. திகைக்கும் மனிதன் அகம் மாறாத புற வெற்றி, உண்மையில் வெற்றி அல்ல என்பதை உணர்கிறான். சரி, டார்வினை மறந்துவிடுகிறேன்' என்றாள் பூரணி.

'பரிணாமத்தில் மனிதன் எதையும்விட உயர்ந்த நிலையில் இருப்பது போல இப்போதைக்குத் தோன்றுகிறது. உண்மையில் அவனது நிலை மாறிக் கொண்டிருக்கும் இடைப்பட்ட நிலை. மனமிருந்தாலும் உடலைப் பொறுத்தவரை இன்னமும் மிருகத்திற்கு அருகில்தான் இருக்கிறான். அவனது சித்தத்தை வளர வைப்பதன் மூலம் அவனே இன்னும் தெரிந்து கொள்ளாத சிறப்பான நிலைக்கு, அறியாமையும், இருளும், நோயும், சிக்கலும் இல்லாத ஆனந்தமயமான நிலைக்கு உயர்த்த முடியும் என்று பூரணயோகம் நம்புகிறது' என்றேன்.

'நானும் நம்புகிறேன். கதையில் வரமுடியாத நிஜமான குரங்கிடம் போய் இன்னும் சிறிது காலத்தில் நீ சிந்திப்பாய், காரோட்டுவாய், வழியில் சந்தித்த வாலிபரிடம் ஆன்மீக தத்துவமெல்லாம் பேசுவாய்' என்று சொன்னால் அதற்கு எதுவும் புரிந்திருக்காது. அதே போல ஆர்வமில்லாத மனிதனிடம் அடுத்த நிலையைப் பற்றிப் பேசினால் புரிந்து கொள்வானா என்ன?' என்று கூறி சிரித்தாள் பூரணி.

'இதுதான் கடவுளை கண்டடையும் வழி என்று உபதேசித்து புதிய மதத்தைப் பூரணயோகம் உருவாக்கவில்லை. பல மதங்களைக் கலந்து வேறொரு மதத்தை அமைக்கவில்லை.

பழைய எந்த மதத்தையும் புதுப்பிக்கவில்லை. வரையறுக்கப்பட்ட முறைகளற்ற, மதமற்ற, குருவற்ற யோகமிது' என்றேன்.

'குரு இல்லாத யோகமா!' என்றாள் பூரணி.

'குரு என்று பிற யோகங்களில் குறிப்பிடப்படுபவரைப் போன்றவர் பூரணயோகத்தில் இல்லை. இறைவனைத் தவிர பிற அனைவரும் சாதகர்கள்தாம். வாழ்வில் எல்லாமே யோகம் என்று கூறும் இந்த யோகத்தில் எல்லாமே குருதாம். நாம் எதிர்கொள்ளும் மனிதர்கள், மிருகங்கள், பொருட்கள், நிகழ்ச்சிகள் எல்லாமே ஏதோ ஒன்றை நமக்குச் சொல்லித் தர வரும் குரு. கற்கவேண்டியத்தை நாம் கற்றுக் கொண்டதும் ஒரு குரு விலகி வேறொரு குரு வருவார்' என்றேன்.

'பூரணயோகத்தின் நோக்கம் என்ன?' என்றாள் பூரணி.

'அகவளர்ச்சி மூலம் ஆன்மீக வளர்ச்சி பெற்று மனித சுபாவத்தை இறைமயமாக்கி, மனிதவாழ்வை இறைவாழ்வாக்கி, மனதைக் கடந்த சூப்பர்மைண்ட் என்ற உயர்ந்த சித்தத்தை பெறுவது' என்றேன்.

'சித்தம் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?' என்று கேட்டாள் பூரணி.

'பொதுவாக நனவு நிலையை, மனதின் ஒரு திறனை, சிந்திக்கவல்ல நிலையை கான்ஷியஸ்னஸ் என்று உலகம் சொல்கிறது. மயங்கி விழுந்தவரை கான்ஷியஸ்னஸ் இல்லாதவராகி விட்டார் என்கிறது. ஆன்மீகத்தில் அது வேறொன்றைக் குறிக்கிறது. தூங்கும்போது சிந்திக்காமலே இருந்தாலும் குளிரெடுத்தால் போர்வையை கை நாடுகிறது. பூச்சி மேலே விழுந்தால் தூக்கத்திலும் தட்டி விடுகிறோம். கனவு காண்கிறோம். நம்மைச் சுற்றி நடப்பவற்றைக் கவனிக்காத, சிந்தனையற்றுப் போன நிலையிலும் ஏதோ நம்மில் ஒரு சக்தி, ஒரு கரணம், ஒரு பகுதி நம் வாழ்வை அனுபவித்து அறிந்து கொண்டே இருக்கிறது. யோகத்தில் அதைத்தான் கான்ஷியஸ்னஸ், சித், சித்தம், போதம் என்று கூறுகிறோம். அது மனதின் திறனோ, உயிரின் திறனோ, உடலின் திறனோ அல்ல' என்றேன்.



'உயர்ந்த சித்தம், தாழ்ந்த சித்தம் என்று எதை வைத்துச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள் பூரணி.

'எல்லோருக்கும் கண் என்ற அங்கம் இருந்தாலும், ஆயிரம் அடி தள்ளியிருக்கும் கனியை அர்ச்சுனனால் மட்டுமே பார்க்க முடியும். திருதராஷ்டிரனால் எவ்வளவு முயன்றாலும் எதையும் பார்க்க முடியாது. திருதராஷ்டிரனின் மனைவி வசுமதி தன் கண்களைத் தானே பட்டுத்துணியால் கட்டிக் கொண்டு எதையும் பார்க்க மறுத்தாள். சித்தம் எல்லோரிடமும் உண்டு என்றாலும் அது வெவ்வேறு நிலைகளில் இருக்கிறது. மனிதனின் காதுகள் குறிப்பிட்ட அளவுகளுக்கு உட்பட்ட ஒலிகளைத்தான் கேட்க முடியும். அந்த அளவுகளைவிட அதிகமாகவோ, குறைவாகவோ உள்ளவற்றை அவனால் கேட்க முடியாது என்கிறது அறிவியல். அவனால் கேட்க முடியாதவற்றைச் சில மிருகங்கள் கேட்கின்றன, சில கருவிகளால் பதிவு செய்கின்றன. மனிதனது சித்த நிலையைவிட அதிக வீச்சும், அதிக வீரியமும், அதிக தெளிவும் உள்ள சித்த நிலை உயர்ந்த சித்த நிலை. அவனது சித்த நிலையைவிடக் குறைவான வீச்சும், குறைவான வீரியமும், குறைவான தெளிவும் உள்ள சித்த நிலை தாழ்ந்த சித்த நிலை. அவனது தற்போதைய புலன்களைக் கொண்டு அவற்றை அறியமுடியாது. பிரபஞ்சத்தில் அனைத்திற்குமே சித்தம் உண்டு. அவை உள்ள நிலைகள்தான் வேறு' என்றேன்.

'முயன்றால் சித்த நிலையை எப்போது வேண்டுமானாலும் உயர்த்தி கொள்ளலாம்தானே?' என்றாள் பூரணி.

'தாழ்த்தவும் செய்யலாம். பரிணாமத்திற்கு எதிரான செயல்முறை அது. மனிதன் உயர்ந்தவை வந்தால் அதை ஏற்க மறுத்து, இருப்பது போதும் என்பான். பெரும்பாலான மனிதர்கள் அதைத்தான் செய்கிறார்கள். திருதராஷ்டிரன் பிறக்கும்போதே பார்வையற்றவன். இருளில் ஒலிகளால் மட்டுமே உலகை உணர்ந்து வாழ்ந்தவன். மிகவும் பெருந்தன்மையானவன். அதனால் விண்ணுலக தேவனொருவன் அவனுக்குப் பார்வை தந்தான். ஒளியில் உலகையும், உருவங்களையும், வண்ணங்களையும் கண்ட திருதராஷ்டிரன் பித்துப் பிடித்தவனைப் போலாகிவிட்டான். 'இது என் உலகமல்ல, எனக்கு எதுவும்

புரியவில்லை, இதில் என்னால் வாழமுடியாது' என்று முறைப்பாடு செய்யவே தேவன் பழைய இருள் உலகத்தைத் திரும்பத் தந்தான். அதன்பின்தான் திருதராஷ்டிரன் நிம்மதி அடைந்தான். இருப்பினும் அவன் பெருந்தன்மைக்குப் பரிசாக சொற்களால் காட்சியைச் சிறைபிடிக்கும் சஞ்சயனை உதவி-யாளனாக வாழ்வு அனுப்பி வைத்தது' என்றேன்.

'உயர்வது சிரமம், விழுவது எளிது. உயர்வதைப் பற்றி மட்டும் பேசுவோம். பூரணயோக தத்துவத்தைப் பற்றி சுருக்கமாக சொல்லுங்கள்' என்றாள் பூரணி.

'பிரபஞ்சத்தின் தோற்றங்களுக்குப் பின்னால் அழிவற்ற ஒற்றை சத்தியம் உள்ளது, அதையே இறைவன் என்கிறோம். அஞ்ஞானத்தால், அகங்காரத்தால் பிரிந்தது போல தோற்ற-மளிக்கும் அனைத்துமே பிரிக்க முடியாத அந்த ஒற்றைப் பெருஞ்சத்தியத்தால் ஆனவையே. அகமுயற்சியான யோகப்-பயிற்சியின் மூலம் பிரிவுண்டாக்கும் சித்தத்தை விலக்கி தன்னுள்ளும் பிறவற்றினுள்ளும் இறைவனைக் கண்டு, அவனாக மாறி, உலகில் இறைவாழ்வை நடத்த முடியும். அந்த முயற்சியே பூரணயோகம். ஆர்வத்துடன் சுயார்ப்பணம் செய்து தன்னுள் இறைவனைச் செயல்பட வைக்கும் ஆரம்பகட்ட முயற்சியை மனிதன் செய்து முடித்துவிட்டால், மீதி யோகத்தை இறைவன் செய்து முடிப்பான்' என்றேன்.

'ஆர்வமே சாதனைக்கு அஸ்திவாரம் என்கிறார்கள். ஆன்மீக ஆர்வம் போன்ற அபூர்வமான ஒன்று எழும் தூய இடத்திலும் தடைகள் உண்டாவது ஏன்?' என்று கேட்டாள் பூரணி.

'பிழைத்திருத்தலே வாழ்க்கை என்பதே கிட்டத்தட்ட எல்லோருடைய நிலையும். மனிதனுக்கு மனம் இருந்தாலும் உணவு, இனப் பெருக்கம், தன்னலம் மட்டுமே அவனுக்கு முக்கியமாக இருக்கின்றன. இந்த ஜட வாழ்வு கீழே இருப்பதாக வைத்துக் கொண்டால், நாம் நாடும் இறைவாழ்வு மேலே இருக்கிறது. இரண்டுக்கும் நடுவில் இருக்கும் நாம் நமது சக்தியை கீழிருப்பவற்றிற்காக செலவழிக்குந்தோறும் மேல் நோக்கிய பயணத்தில் தாமதம் ஏற்படுகிறது. கீழிருப்ப-வற்றிற்காக செலவழிக்கும் சக்தியை மேலிருப்பவற்றிற்காக



செலவழிக்குந்தோறும் நம் பயணம் துரிதப்படுகிறது. மேலிருப்பதைத் தவிர வேறெதையும் கருதாத முழு மாற்றம் நிகழாதவரை கீழிருந்து தடைகள் எழுந்து கொண்டேதான் இருக்கும்' என்றேன்.

'ஒரேயடியாக முழு மாற்றத்தைக் கொண்டு வர முடியாதா?' என்று கேட்டாள் பூரணி.

'மிகவும் சிரமம். மனித சுபாவம், ஏன் பிரபஞ்சமே கூட, பழக்கங்களால் ஆனது. நம் பழக்கங்களே நம் ஆன்மீக முயற்சி-களுக்கு எதிராகச் செயல்படுகின்றன. மனிதன் என்பவன் ஏதோ ஒரு சில பெரிய குணாதிசயங்களும், பழக்கங்களும் அவற்றை ஆதரிக்கும் பல சிறு குணாதிசயங்களும், பழக்கங்களும் ஒன்றாகத் திரண்டவன். இந்த குணாதிசயத் தொகுப்பை இழப்பது இறப்பதற்கு சமானம். ஆன்மீக முயற்சி மனித சுபாவத்தை மாற்றி வேறு வகையான இறை சுபாவத்தைப் பெறும் முயற்சி என்பதால்தான் அதை மறுபிறப்பு என்கிறோம்' என்றேன்.

'என்ன செய்தால் இந்த மறுபிறப்பை நிகழ்த்திக் காட்ட முடியும்?' என்று கேட்டாள் பூரணி.

'மனம் புறவயமானவற்றில், ஜடத்தில் மட்டுமே நம்பிக்கை வைத்திருக்கிறது. அதை முதலில் மாற்ற வேண்டும். மனம் அகவயப்பட்டு, புலன்களால் அறிய முடியாதவற்றின் மீதும் நம்பிக்கை கொண்டு, இறைவனை மட்டுமே நாடி, மனிதனை இறைவனுக்கு ஏற்ற கருவியாக மாற்ற சதா முயல வேண்டும். ஒவ்வொரு கரணத்திலும், ஒவ்வொரு அசைவிலும் மனிதன் பூரண சரணாகதியை நாட வேண்டும். மனித மனம் இறை மனமாக, மனித உயிர் இறை உயிராக, மனித வாழ்வு இறை வாழ்வாக, மனித உடல் இறை உடலாக மாற வேண்டும்' என்றேன்.

'எனக்குத் தெரிந்தவரை உடலால் சிலர் யோகம் செய்கின்றனர். மனதாலோ அல்லது உணர்வாலோ வேறு பலர் யோகம் செய்கின்றனர். அனைத்தின் மூலமும் யோகம் செய்வது அசாதாரணமானது' என்றாள் பூரணி.

‘அனைத்தையும் சரணாகதி செய்யும் யோக வழி பூரணயோக வழி. இது உபநிஷதம் காட்டும் பிரம்மத்தை அடையும் வழி. பிற வழிகள் மனிதர்கள் காட்டும் பிரம்மத்தை அடையும் வழிகள்’ என்றேன்.

‘மேலே சொல்லுங்கள்’ என்றாள் பூரணி.

‘யோகம் சிரமமானது. அஞ்ஞானத்திலும், அகந்தையிலும், இருளிலும் இருக்கும் மனிதன் ஞானத்தை, அகந்தை-யின்மையை, ஒளியை நோக்கிச் செல்வதை வாழ்வும் அவனது கரணங்களும் எதிர்க்கின்றன. நல்லவனை எதிர்ப்பவன் கெட்டவனாகத்தான் இருக்க முடியும் என்ற எளிய சூத்திரத்தை முன்னிறுத்தி இறைவனை அடையும் முயற்சிக்கு எதிராக இருப்பவை எல்லாம் மாயை என்று பிற யோகிகள் சொல்லி-விட்டார்கள். அவற்றை விலக்கி விட்டார்கள். தொந்தரவு தருபவற்றை ஏற்று மாற்றுவதைவிட விட்டுவிடுவது எளிதாக இருந்தது’ என்றேன்.

‘பிரச்சனை செய்யும் கணவனையோ, மனைவியையோ ஏற்று மாற்றுவதைவிட விவாகரத்து செய்து விடுவது எளிதாகத்தான் இருக்கும். அப்படிச் செய்தால் இணைவின் இன்பத்தை இழக்கிறோம் என்பதை விவாகரத்து செய்பவர்கள் அறிவதில்லை’ என்றாள் பூரணி.

‘பிற யோக சாதகர்கள் இறைவனிடம் எது இட்டுச் செல்லும் என்று நம்பினார்களோ அதை மட்டும் இறுகப் பற்றிக் கொண்டார்கள். உயிர் வாழத் தேவையான குறைந்தபட்ச வாழ்வாதாரங்களை மட்டும் வைத்துக் கொண்டு பிறவற்றை விட்டுவிட்டார்கள்’ என்றேன்.

‘பூரணயோகம் இது போன்ற குறுக்கு வழியை அனுமதிப்-பதில்லை அல்லவா?’ என்று கேட்டாள் பூரணி.

‘நாம் ஏற்றவற்றில் மட்டுமின்றி, விலக்கியவற்றிலும் இறைவன் உண்டு. இறைவனே உலகமானான் என்கிறது பூரணயோகம். ஏற்பவையும், விலக்கியவையும் இறைவனே. எதை விலக்கினாலும் இறைவனோடு நமது கூடல் முற்றாக நிகழவில்லை என்பதால் பூரணயோகம் பூரணமற்றுப்



போய்விடுகிறது. எதையும் விலக்காமல் ஜடத்திலும், வாழ்விலும், மனத்திலும், அகத்திலும், புறத்திலும் உள்ள இறைவனை வெளிப்படுத்தி அனைத்தையும் அடுத்த நிலைக்கு உயர்த்துவதே பூரணயோகம்’ என்றேன்.

‘நம் முழு கவனத்தையும் ஒன்றே ஒன்றில் வைத்தால், அதில் நிபுணத்துவம் வருமே? குறுகிய காலத்தில் முன்னேற அதுதானே உதவும்?’ என்று கேட்டாள் பூரணி.

‘பிற வழிகளில் ஒரு கரணத்தை மட்டும் பற்றிக் கொண்டு பிற கரணங்கள் உண்டாக்கும் தடைகளைப் பொருட்படுத்தாமல் வேகமாக முன்னேறுவது ஆரம்பத்தில் நன்றாக இருந்தாலும் ஒரு நிலையில் யோகம் தடைபட்டு, குறைபட்டு நின்றுவிடும். பூரணயோகம் எல்லாக் கரணங்களையும் தயார் செய்வதால் ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும் ஒரு கட்டத்திற்குப் பின் தயார் செய்யப்பட்டுவிட்ட கரணங்கள் ஒன்றுக்கொன்று உதவத் தொடங்கும். வாழ்வும் உதவத் தொடங்கும். அப்போது முன்னேற்றம் வெகு துரிதமாக இருக்கும்’ என்றேன். பின் ‘நீங்கள் விவாகரத்திற்கு எதிரியா?’ என்று கேட்டேன்.

‘ரத்து இருக்கட்டும். விவாகமே தேவையா என்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு’ சிரித்துக் கொண்டே சொன்னாள் பூரணி.

அவள் வார்த்தைகள் என்னை சோர்வடைய வைத்தன.

மழையால் போக்குவரத்து எதுவுமில்லாதிருந்தாலும், சிவப்பு விளக்கு எரிந்ததால் காரை நிறுத்தினாள் பூரணி. வேறொரு கார் சிவப்பு விளக்கை பொருட்படுத்தாமல் சென்றது.

‘மனிதன் மேற்பரப்பில் வாழ்கிறான். தன் அகத்தில் என்ன இருக்கிறது என்பது அவனுக்குத் தெரிவதேயில்லை. பூரணயோகம் அவனுள் இருப்பவற்றை வெளியே கொண்டு வரும். அனைத்து சிக்கல்களும் உள்ள உலகத்தைத் தன்னுள் சாதகன் காண்பான். அத்தனை சிக்கல்களையும் அவன் தீர்க்க வேண்டும்’ என்றேன்.

‘வாசுகியை மத்தாக்கி பாற்கடலை கடைந்தபோது எதிர்-பாராதவை எல்லாம் வெளியே வந்தனவாம். ஸ்ரீதேவியோடு

மூதேவி வந்தாள். அமிர்தமோடு விஷமும் வந்தது' என்றாள் பூரணி.

'பல பயங்கரமான காட்டு மிருகங்களையும், பல இனிய தேவதைகளையும் பூட்டி வைத்திருக்கும் கூண்டுதான் நம்முடைய அகம். அது பாற்கடல். யோகப்பாம்பைக் கொண்டு நம்மைக் கடைந்தால் என்னென்னவோ வரும். ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக செயல்பட்டுக் கொண்டு, ஒன்றோடொன்று முரண்பட்டுக் கொண்டு தத்தம் விருப்பப்படி செயல்படுவதைப் பார்க்க முடியும். அவற்றிடையே இணக்கத்தை, ஒத்திசைவை, ஒற்றுமையைக் கொண்டு வரவேண்டும்' என்றேன்.

'மனம் சொல்வதைப் பிராணன் கேட்குமா? பிராணனுக்கு உடல் எந்தக் காலத்தில் கட்டுப்பட்டது? ஒவ்வொன்றும் தன் வாலை விழுங்கத் துடிக்கும் பாம்பு' என்றாள் பூரணி

'மனிதன் எப்போதுமே சந்தை நடுவில் நிற்பவன். பனி மலையிலும், குகைகளிலும் தனித்துத் தவமிருப்பவனும் அப்படிச் சந்தையில் நிற்பவன்தான். தான் பிறரிலிருந்து பிரிந்து தனித்து நிற்பதாகக் கற்பனை செய்து கொள்கிறான். அகத்திலும், புறத்திலும் அவன் ஒருபோதும் அப்படி இருக்க முடியாது. அவன் தன் எண்ணங்கள் என நினைப்பவற்றில் பெரும்-பாலானவை வெளியே உருவாகி அவனுக்குள் நுழைந்தவை. நம் பெரும்பாலான அக அசைவுகளும், பழக்கங்களும் அப்படிப்பட்டவையே' என்றேன்.

'குழந்தை ஒன்று ரிக்ஷா என்பதை ரிஷ்கா என்று தவறாக உச்சரித்தது. அப்பா 'ரிஷ்கா இல்லை, ரிக்ஷா' என்று திருத்தினார். அடுத்தடுத்து வந்த நாட்களில் குழந்தை மீண்டும் மீண்டும் ரிஷ்கா என்று தவறாக உச்சரிக்க, அப்பா மீண்டும் மீண்டும் திருத்தினார். ஒரு நாள் நண்பர்களிடம் பேசும்போது ரிஷ்கா என்று அப்பா உச்சரித்து விட்டு அதிர்ந்து போகிறார்!' என்றாள் பூரணி.

சிரித்தேன். 'எத்தனையோ வெவ்வேறு சக்திகள் நம்மை இயக்குவதை நாம் தவறாக நம்மை நாமே இயக்குவதாக நினைத்துக் கொள்கிறோம். பிரபஞ்ச உலக வாழ்வு சக்திகளின்



எளிய கைப்பாவை நாம். நம் அகந்தை மட்டும் 'நான் தனி, நான் வேறு, நான் எல்லாம் வல்லவன்' என்று புலம்பிக் கொண்டிருக்கும். மனிதன் எண்ணற்ற ஓட்டைகள் கொண்ட பாத்திரம்' என்றேன்.

'எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் பூரணயோகம் மிகவும் சிக்கலானது என்று தோன்றுகிறது. ஒரு கரணத்தை மட்டும் பின்பற்றுவதால் பெரிய சிக்கல் என்ன வந்து விடப் போகிறது?' என்றாள் பூரணி.

'என்ன இவ்வளவு சாதாரணமாகக் கேட்டு விட்டீர்கள்? மற்ற யோகங்களில் தான் ஏற்றுக் கொண்ட வழிக்குரிய கரணத்தின் மீது மட்டும் முழு கவனத்தையும் ஒருமுனைப்படுத்தினால் போதும். பிற எதையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. பக்தியோகி உணர்ச்சியால் இறைவனை அடைய முயல்கிறான். மனதையோ, உடலையோ அவற்றின் சிக்கல்களையோ அவன் பொருட்படுத்துவதேயில்லை. ராஜயோகி மனதின் மூலம் இறைவனை கண்டடைய முயல்கிறான். அவனுக்கு உடலோ, பிராணனோ முக்கியமில்லை. அவை எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று விட்டுவிடுகிறான். நான் ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் ஒவ்வொரு கரணமும் தனக்கேயுரிய சிக்கல்களை உருவாக்கிக் கொண்டேதான் இருக்கும். கவனிக்காமல் விட்ட பிராணனைப் போல ஆபத்து விளைவிக்கும் எதிரி உண்டா? எப்பேர்ப்பட்ட ரிஷியின் தவத்தையும் எளிதாக அப்சரசை வைத்து கலைத்திருக்-கிறார்களே! ஹடயோகிகள் மனநிலை பிறழ்ந்து போனதுண்டு. உடல் ஒத்துழைக்காமல் போனதால் பக்தியோகத்தை முடித்துக் கொண்டவர்கள் உண்டு' என்றேன்.

'உண்மைதான்' என்றாள் பூரணி.

'பலர் உலகை, வாழ்வை விட்டு விலகி இறைவனோடு மட்டும் வாழ்கிறேன் என்று தனிமையை நாடுகிறார்கள். அப்படிச் செய்யும்போது, வாழ்வை இழந்து விடுகிறார்கள்' என்றேன்.

'ஸ்ரீ அரபிந்தோ இறுதிவரை தனிமையில் இருந்தார் என்று படித்தேனே?' என்று கேட்டாள் பூரணி.

‘தனிமைக்குப் போகும்முன், அவர் பார்க்காத படிப்பா, இங்கிலாந்தா, ராஜசபையா, பத்திரிகையா, இல்லை புரட்சியா? அவரைவிட அதிகமாக எத்தனை யோகிகள் வாழ்வின் பல முகங்களைப் பார்த்திருக்கப் போகிறார்கள்? யோகம் செய்ய தனிமையை நாடாமல் வாழ்வில் தொடர்ந்திருந்ததால்தானே பொறுமையிழந்த பிரம்மம் அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தது?’ என்றேன்.

கிளுக்கென்று சிரித்தாள் பூரணி. ‘‘தனிமை தேவையில்லை என்கிறீர்கள்?’’

‘பூரணயோகத்தில் மாற்ற முடியாத சட்டம் என்று எதுவுமே இல்லை. இன்னும் சொல்லப் போனால் சமர்ப்பணம், சரணாகதியைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. அவரவர் சுபாவத்தை ஒட்டி மாற்றத்திற்கான முறைகளைத் தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டியதுதான். ஊதாரி, கருமியாக இருந்து பார்க்க வேண்டும். கருமி, ஊதாரித்தனமாகச் செலவழித்து அனுபவம் பெற வேண்டும். எப்போதும் கூட்டத்தின் நடுவே இருப்பவன் தனிமையை நாட வேண்டும். தனிமையை விரும்பி கூட்டத்தைத் தவிர்ப்பவன் மேடையேறிப் பேச வேண்டும். புலால் உண்ணாதவன் சில நாட்களாவது மீன் குழம்பும், கோழி வறுவலும் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதிரான அனுபவங்களைப் பெறும்போது நாம் முழுமையை நோக்கிப் போகிறோம். முன்னேறியபின், அறியவேண்டியதை அறிந்தபின், எதிரான இரு அனுபவங்களுமே நமக்குத் தேவையற்றவையாகி விடுகின்றன’ என்றேன்.

‘ஆனால், எதைச் செய்தாலும் நிதானம் தவறாமல் பொது-புத்தி பிசகாமல் செய்யவேண்டும், என்றாள் பூரணி.

‘ஆமாம். புத்தமத பயிற்சி பெற்ற வெளிநாட்டு சாதகர் ஸ்ரீ அரபிந்தோவைத் தேடி வந்தார். அகிம்சாவாதியான அவருக்குக் கோழி சூப் தயாரிக்கப்படும் இடத்தை ஒட்டிய அறை ஒதுக்கப்பட்டது. இரவும், பகலும் கோழிகள் கொல்லப்படும்போது எழுப்பிய கதறலை முதலிரு நாட்கள் அவரால் பொறுக்கவே முடியவில்லை. தத்துவத்தைப் புரிந்துகொண்டவர் மனதைச் சமநிலையில் வைத்துக் கொண்டார். ஒரு வாரத்திற்குள்



தன் சுபாவத்தின் ஒரு பகுதியை வென்றார். அன்றே அவருக்கு அமைதியான வேறொரு இடத்தில் புதிய அறை ஒதுக்கப்பட்டது! ஆடிட்டர் அலுவலகத்தில் சந்துரு என்று ஒரு பையன் இருக்கிறான். உயிர்க்கொலை என்றால் அவன் மனம் துடிக்கும். சாதகர் கதையைக் கேட்டதும் சில நாட்கள் கசாப்புக்கடை வாசலில் நின்று ஆட்டுக்குட்டிகள் கொல்லப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன்பின் தன் மனம் அமைதி அடைந்துவிட்டதாகச் சொன்னான். இதுபோல எவரும் எதிர்-பார்க்க முடியாத காரியங்களை அடிக்கடி செய்து விடுவான்’ என்றேன்.

‘வேடிக்கையான மனிதர்! பார்க்க வேண்டும் போலிருக்கிறது’ என்றாள் பூரணி.

‘சாதகனுக்கு அக, புற தனிமை அவனது நீண்ட ஆன்மீகப் பாதையில் அவ்வப்போது எடுத்துக் கொள்ளும் குறுகிய நேர ஓய்வைப் போன்றது. வாழ்வை அவன் தவிர்க்கவே கூடாது. யோக நிலையின் தேவையை ஒட்டி தனிமை தேவையா என்று முடிவு செய்ய வேண்டும்’ என்றேன்.

‘புரிகிறது’ என்றாள் பூரணி.

‘பூரணயோகி தனக்காக மட்டுமல்லாமல் உலகத்திற்காகவும் யோகம் செய்கிறான். தன்னந்தனியாக உலகத்தோடு போர் செய்கிறான்’ என்றேன்.

‘சிறு நாட்டின் மீது உலகம் போர்த் தொடுக்கும்போது, உள்நாட்டுக் கலகத்தோடு உலகப் போரையும் சமாளிக்க வேண்டும்’ என்றாள் பூரணி.

‘ஆமாம். அவன் தனக்கேயுரிய தனிப்பட்ட சிக்கல்களோடு, உலக சிக்கல்களின் பிரதிநிதியாகவும் இருக்கிறான். எத்தனை முறை சிக்கல்களைத் தீர்த்தாலும் அவை மீண்டும் மீண்டும் அடுத்த நிலையில் எழுந்தபடியே இருக்கும். என்னுடைய சாதக நண்பரின் பிரிய அண்ணன் மூன்று லட்சம் கடன் வாங்கி திருப்பித் தரமுடியாமல் சிரமப்பட்டார். சாதகர் ஆன்மீக முயற்சியால் போன வருடம் அதைத் திருப்பிக் கட்டினார். போன மாதம் அண்ணன் முப்பது லட்சம் கடனாளியாகி விட்டதாகச்

சொன்னார். யோகத்தால் திருப்பி கட்டி விட முயற்சி செய்கிறார்' என்றேன்.

'அதன்பின் என்ன நடக்கும்?' என்றாள் பூரணி.

'அடுத்த வருடம் சொல்கிறேன்' என்று கூறிச் சிரித்தேன். 'இதில் கவலைப்படவோ, பயப்படவோ எதுவுமில்லை. சிக்கல் வருவது மேலும் உயரத்தான். தனிமனித சிக்கல் சாதகரைத் தேடி வரவில்லை என்றால் அவரைத் தேடி உலகச் சிக்கல் வரப் போகிறது என்று அர்த்தம்!'

'உள்நாட்டுக் கலவரங்கள் அடங்கிய பின்னும் உலகக் கலவரங்களை மீண்டும் மீண்டும் எதிர்கொள்ள வேண்டி-வருமென்றால் அவனது சிறு நாடு உலகமாக மாறிவிடுகிறது என்றுதானே அர்த்தம்?' என்று கேட்டாள் பூரணி.

'அதேதான், ஆனால் பூரணயோக சாதகனால் சிறு அகச்சிக்கல்களைக் கூட எளிதாகத் தீர்த்துவிட முடியாது. பிற எந்த யோக மார்க்கத்திலும் அகச்சிக்கல்கள் உண்டாகும். அவற்றால் புறச்சிக்கல்களும் உருவாகும். சிக்கல்களைத் தவிர்ப்பதன் மூலம், பிரச்சனைகளை பொருட்படுத்தாமல் இருப்பதன் மூலம், பிற யோகி தன் வழியில் முன்னேறுகிறார். பூரணயோக சாதகன் எதையும் தவிர்க்கவோ, துறக்கவோ கூடாது. எல்லாவற்றையும் இறைவனுக்கு தேவைப்படும் கருவிகளாக ஏற்று அவற்றை மாற்றுவதே அவன் சாதனை' என்றேன்.

'தவிர்க்கவே முடியாத பெரிய சிக்கல் வரும்போதுகூட இதுவேதான் சட்டமா? அப்போதுகூட தனிப்பட்ட கவனத்தை தவிர்க்கவேண்டுமா' என்று கேட்டாள் பூரணி.

'மாற்ற முடியாத சட்டம் என்று பூரணயோகத்தில் எதுவுமே இல்லை என்று சொன்னேனே! ஒரு முக்கியமான சிக்கலைத் தீர்க்க அதன்மேல் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தலாம் என்றாலும் அதை எப்போதாவது தற்காலிகமாகத்தான் செய்ய வேண்டும். அவனுக்குரியது அனைத்தையும் தழுவி ஏற்கும் கவனம். பக்தி யோகத்தில் உணர்வு மொத்தமும் ஒருமுனைப்-பட்டு இறைவனை நாடுகிறது. ராஜயோகத்தில் மனமும்,



ஹடயோகத்தில் உடலும் ஒருமுனைப்பட வேண்டும். பூரண யோகத்தில் ஒருமுனைப்படுதல் அவசியம்தான். ஆனால் மனிதனுள் இருக்கும் அனைத்துமே ஏககாலத்தில் இறைவனில் ஒருமுனைப்பட வேண்டும்' என்றேன்.

'ஒரு கருத்திலோ, ஒரே ஒரு கோட்பாட்டிலோ, ஒரு மந்திரத்திலோ ஒருமுனைப்படக் கூடாதா?' என்று கேட்டாள் பூரணி.

'அவ்வப்போது அப்படியும் செய்யத்தான் வேண்டியிருக்கும். அதெல்லாம் வழியில் இருக்கும் தனி மரங்களிலிருந்து கிடைக்கும் உதிரிப்பூக்கள். நாம் நாடுவது பூந்தோட்டத்தை. உதிரிப்பூக்கள் உதவியாக இருக்கும் சிறு முறைகள், அவ்வளவுதான் அவற்றின் முக்கியத்துவம். நாம் தேடுவது விரிந்த பெருந்திறப்பை, பரந்த மகத்தான விழிப்பை. மனிதனுள்ளிருக்கும் ஒவ்வொரு அணுவும் மலராகப் பூத்து அனைத்தும் ஆண்டவனுக்கு சமர்ப்பணமாக வேண்டும்' என்றேன்.

'அனைத்தும் ஒருமுனைப்படுவது அத்தியாவசியம் என்றாலும் அதைச் செய்வது சாத்தியமா? சுபாவம் எத்தனை சிக்கலானது என்று கீதை காலத்திலிருந்தே நமக்குத் தெரியுமே. உலகப் பந்தை கைகளால் தூக்கும் முயற்சி' என்றாள் பூரணி.

'பிற எதையும்விட சுபாவம் அதிக சிக்கலானது. அதன் எல்லா பகுதிகளையும் ஒரே சமயத்தில் கையாள்வது தனியாளாக ஒருவன் பல காட்டு விலங்குகளை ஒரே சமயத்தில் எதிர் கொள்வதைப் போல ஆபத்தானது. ஒரு சமயத்தில் ஒன்றை கையாளுவதே சிரமமானது என்றாலும் அப்படித்தான் செய்தாக வேண்டும். அவரவர் சுபாவத்தை அனுசரித்து, நம் சுபாவத்தில் உள்ளவற்றில் எது உயர்ந்த அம்சமோ அதைப் பற்றிக் கொண்டு முயற்சி செய்ய வேண்டும்' என்றேன்.

'விமானம் ஓட்டத் தெரிந்தவன் சைக்கிள்தான் ஓட்டுவேன் என்று சொல்லக் கூடாது. ஆனால் தாழ்ந்ததை பற்றிக் கொண்டு உயர்ந்ததை ஒரு பொருட்டாக மதிக்காமல் இருந்தால்தான் மனிதனுக்கு வாழ்வு சுவையானதாக இருக்க முடியும்' என்றாள் பூரணி.

‘கிட்டத்தட்ட மிருகம் போல நடந்து கொண்டாலும், மனிதன் உணர்வுகள் மட்டுமே உள்ள விலங்கு அல்ல. அவனிடம் உயர்ந்த மனமும், சைத்திய புருஷனும் உண்டு. அவற்றைக் கொண்டு தாழ்ந்த பகுதிகளை மாற்ற அவனால் முடியும். சமர்ப்பணம் செய்தால் மனதையும், சைத்திய புருஷனையும் நம் சுபாவத்தை மீறி கொக்கிகளாக மாட்டி இறைவன் நம்மை எளிதாக மேலே உயர்த்தி விடுவான்’ என்றேன்.

‘சைத்திய புருஷனா?’ என்று கேட்டாள் பூரணி.

‘பிரம்மமே உலகமாகத் தோன்றுகிறது. நம் மனம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அதை வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கிறோம். அப்படிப்பட்ட பெயர்களில் ஒன்று ஆன்மா. பாலுக்குள் நெய் போல மனிதன் கண்ணுக்குத் தெரியாமல், அதே சமயம் அவனுள் எப்போதும் ஆன்மா இருக்கிறது. அது இறைவனே என்றும், இறைவனின் பகுதி என்றும், இறைவனின் பிரதிநிதி என்றும், இறைவனோடு தொடர்பு கொள்ளவல்ல மனித கரணம் என்றும் யோகிகள் அவரவர் கண்ட தத்துவ முறைப்படி விளக்கினார்கள். ஒருவர் கடவுளைக் கண்டதும் அது கரையக்-கூடியது என்றார். இன்னொருவர் அது கரையாது என்றார். பொதுவாக எல்லோருமே அது மாறாத ஒன்று என்று நினைத்தார்கள்’ என்றேன்.

‘பூரணயோகம் என்ன சொல்கிறது?’ என்று கேட்டாள் பூரணி.

‘மனிதனின் நெஞ்சின் நடுவே சூட்சுமமாக இருக்கும் ஆன்மாவின் ஒரு பகுதி சைத்திய புருஷன். அது மனிதனின் உடலும், மனமும் வளர்வதைப் போல வளரக் கூடியது என்கிறது பூரணயோகம். தினம்தினம் போதம் பெறுகின்ற அனுபவங்களை உணவாகக் கொண்டு வளர்கிறது. இறைவனின் நேரடியான பிரதிநிதியான அது வெளிவருவது யோகத்தில் முக்கியமான கட்டங்களில் ஒன்று. பூரணயோகத்தில் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பு இது’ என்றேன்.



‘விலங்கிற்கு இல்லாத பகுத்தறிவும், தர்க்கமும் மனிதனுக்கு உண்டு. அவற்றைப் பயன்படுத்தினாலே உயர்ந்து விடலாம்’ என்றாள் பூரணி.

‘அப்படியா? தனியே காரில் செல்லும் அழகிய இளம் பெண், ஆளரவமற்ற தெருவில் அறிமுகமில்லாத ஆணை தன் காரில் ஏற்றிக் கொள்வது பகுத்தறிவுள்ள செயலா?’ என்று கேட்டேன்.

‘பகுத்தறிவைப் பயன்படுத்தி இருந்தால் ஆன்மீக வாய்ப்பை இழந்திருப்பேன்’ என்றாள் பூரணி.

‘பகுத்தறிவால் பல சமயங்களில் பெரும்பலன் கிடைக்கும். சில சமயங்களில் பேரிழப்பு ஏற்படலாம். ஆனால் சமர்ப்பணம் செய்யப்பட்ட உயர்ந்த மனதைக் கொண்டு இருண்ட ஆசை-களை ஒளிமயமானவையாக மாற்ற முடியும். அப்படிச் செய்யும் போது பிரபஞ்ச அறிவையும், தனிமனிதர்களின் அறிவையும் கொண்டவனின் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பது தெளிவாகிவிடும். பூரண யோகம் என்பது மனதை நிறைக்கும் இறைவனைப் பற்றிய ஒற்றைச் சிந்தனை, இதயத்தை நிறைக்கும் இறைவனைப் பற்றிய ஒற்றை உணர்வு, அனைத்தையும் நிறைக்கும் இறைவனைப் பற்றிய ஒற்றை விருப்புறுதி என்ற மூன்று அங்கங்களைக் கொண்ட முப்புரி யோகப்பாதை. அதையடைய நம் முழு கவனமும் இறைவனின் மீது ஒருமுனைப்பட வேண்டும்’ என்றேன்.

‘இறைவன் என்றால் யார், என்ன என்று பொதுவாக யாருக்கும் தெரியாது. என்னவென்று தெரியாத ஒன்றின்மீது எப்படி கவனம் ஒருமுனைப்படும்? தத்துவங்களைத் தெரிந்து கொண்ட பின் பயிற்சி செய்வதுதான் நல்லதா?’ என்று கேட்டாள் பூரணி.

‘தத்துவ நூல்களைப் படித்த பின்தான் யோகம் செய்ய வேண்டுமானால் அவதாரபுருஷர்கள் மட்டுமே யோகம் செய்ய வேண்டியதாகி விடும். தத்துவ நூல்களை வார்த்தை வார்த்தையாக வாழ்நாளெல்லாம் கற்று ஞானக் கடலாக ஆன பின்னும் யோகத்தில் ஒரு அடி முன்னேறாமல் இருப்பவர்கள் பலர் உண்டு. ஞானக் கல்வி யோகத்திற்குப் பயனுள்ளது என்றாலும் அது அவசியமான ஒன்றில்லை. மனமும் இதயமும்

விருப்புறுதியும் ஆர்வத்துடன் இறைவனை நாட வேண்டும். அதுதான் அவசியமான ஒன்று' என்றேன்.

'ஆர்வம் அணைந்தணைந்து எழுகிறது. நம்பிக்கை வளர்வதும் தளர்வதுமாக இருக்கிறது. விருப்புறுதி இருக்கிறதா என்றே தெரியவில்லை' என்றாள் பூரணி.

'புயல் காற்றிலே ஏற்றி வைத்த சிறிய தீபம் போலத்தான் இருக்கும். ஆனால் எண்ணெய் ஊற்றாக சமர்ப்பணம் இருந்தால் ஆர்வதீபம் படபடத்துக் கொண்டே இருந்தாலும் அணையாமல் இருக்கும். மெல்ல மெல்ல சூரியனாக மாறிவிடும். தாழ்ந்த மரப்பொந்தில் வைத்த தீப்பொறி காட்டையே வேள்வித்தீயாக மாற்றிவிடும். ஒரே ஒரு பொறி உண்மையான ஆர்வம் இருந்தால் போதும்' என்றேன்.

'ஒரே ஒரு முறை மட்டுமே இறைசிந்தனை எழுந்த கொள்ளைக்காரர்கள் திருமங்கையாழ்வாராக ஆனதையும், வால்மீகியாக ஆனதையும் வேறு எப்படி விளக்க முடியும்?' என்றாள் பூரணி.

'சமர்ப்பணம் மட்டுமிருந்தால் போதும். எதையும் எவரையும் இறைவன் ஏற்றுக் கொண்டு விடுவான். சாதகனின் இதயத்தில் இருப்பவனால் சாதகனின் சத்தியத்தை அறிய முடியாதா? சமர்ப்பணத்தோடு அதைப் பற்றிய கருத்துத் தெளிவும் இருந்தால் மலைச்சரிவில் நீரோட்டம் போல பயணம் துரிதமாக இருக்கும். அனைத்தையும் தழுவி அவற்றைக் கடந்து நிற்கும் இறைவனது அன்பில், கருணையில், மாறாத நம்பிக்கை வைத்துச் சமர்ப்பணம் செய்தாலே போதும். செய்ய வேண்டியவற்றை அவன் செய்து முடித்து விடுவான்' என்றேன்.

பூரணிக்கு விளக்கம் தருவது என்னை வேறொரு மனிதனாக உணர வைத்தது. திறமையாகப் பேசி அவள் பாராட்டைப் பெற வேண்டும் என்ற உந்துதல் எழுந்தது.

'யோகத்தை ஆரம்பித்து சீக்கிரம் வெற்றி பெற வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது' என்றாள் பூரணி.

'ஆர்வத்துடன் யோகத்தை ஆரம்பித்ததுமே ஆசை எழுந்து குறுக்கிடும்' என்றேன்,



'ஆர்வமும், ஆசையும் ஒன்றில்லையா?' என்று கேட்டாள் பூரணி.

'அகந்தையின்றி அடைய முயல்வதை ஆர்வம் என்றும், அகந்தையோடு அடைய முயல்வதை ஆசை என்றும் வைத்துக் கொள்ளுங்களேன்' என்றேன்.

'ஆசை எழுந்ததும் அதை விலக்கி விட வேண்டுமா?' என்று கேட்டாள் பூரணி.

'அதுதான் இல்லை. மனிதனின் ஆழத்தில் தூய ஆன்மா இருக்கிறது. மேற்பரப்பில் ஆசை ஆன்மா இருக்கிறது. இரண்டுமே வெவ்வேறு நிலைகளில் இருக்கும் இறைவனின் வடிவங்கள்தான். குடும்பப் பெண்ணும், விலைப் பெண்ணும் வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும் இருவருமே பெண்கள்-தானே! குடும்பப்பெண் எல்லாவற்றையும் பெற்று குடும்பத்திற்காக தரத் தயாராக இருப்பாள். விலைப் பெண்ணோ எல்லாவற்றையும் தான் பெற்றுக் கொள்ளத் தயாராக இருப்பாள். அகந்தையோடு இருக்கும் ஆசை ஆன்மா யோக முயற்சியால் உண்டாகும் நன்மைகளைத் தானே பெற்று தனக்காக பயன்படுத்திக் கொள்ள முனையும்' என்றேன்.

பூரணியின் முகத்தில் ஒருகணம் வலியுணர்வு தோன்றி மறைந்தது. சிறிது துணுக்குற்றேன். ஒரு பெண்ணோடு நன்றாகப் பழகி அவள் நெருக்கமான தோழி ஆன பின்னும் சிலவற்றைப் பற்றி இயல்பாக பேசத் தயங்குவான் மனிதன். நானோ இப்போதுதான் பழக ஆரம்பித்திருக்கும் பூரணியுடன் ஏன் என்னையறியாமல் இப்படியெல்லாம் பேசுகிறேன்.

'எதையுமே விலக்கக் கூடாதா?' என்று கேட்டாள் பூரணி.

'எத்தனை முறை கேட்டாலும் கூடாது என்பதுதான் பூரணயோகத்தின் பதில். விலகுபவனும், விலக்குபவனும் பூரணயோகி இல்லை. தவறான பார்வை மட்டுமே நாம் விலக்க வேண்டியது. அப்படிச் சொல்வது கூட சரியில்லை. தவறான பார்வையை ஏற்று அதைச் சரியான பார்வையாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஆசையின் நாயகனை முழுமையாக ஏற்று அவனை மெல்ல மெல்ல மாற்ற வேண்டும். அனைத்து

ஆசைகளையும் இறைவனுக்காக வாழும் ஆர்வங்களாக மாற்ற ஆரம்பத்திலேயே அவனுக்குச் சொல்லித் தந்துவிட வேண்டும்' என்றேன்.

'பூரண யோகத்தினால் நன்மை எதுவும் கிடைக்காது என்று நமக்கே சொல்லிக் கொண்டால் ஆசை அடங்குமா?' என்று கேட்டாள் பூரணி.

'பூரண யோக முயற்சியின் பலனாக பலவகையான ஆன்மீக நன்மைகளும் நிச்சயம் கிடைக்கும் என்றாலும் தான் அவற்றைப் பெறுவதைப் பற்றி நினைக்காமல், தன்னுள்ளும் உலகத்தினுள்ளும் எங்கும் எதிலும் இருக்கும் இறைவனுக்காக மட்டும் எதையும் நாட ஆசை ஆன்மாவைப் பழக்க வேண்டும். அதன்பின் சரியாக நாடும் முறையை அதற்குச் சொல்லித் தர வேண்டும். அதுதான் சிரமமானது' என்றேன்,

'அதென்ன சரியாக நாடும் முறை?' என்றாள் பூரணி.

'அறியாமையில் இருக்கும் அகந்தை எதையும் இப்படித்தான் இருக்க வேண்டும், எதையும் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று நினைக்கும். எதை நாடினாலும் தனக்கு விருப்பமான வழிகளில் மட்டுமே அதை அடைய முயலும். அதை மாற்றி இறை விருப்பத்தின்படி நடப்பதைச் சலனமின்றி ஏற்க ஆசை ஆன்மாவைப் பழக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஆசை ஆன்மா இறைவனுக்கு உகந்த வலிமையான தூய கருவியாக மாறி விடும். ஆசையான்மா இறைவனுக்குத் தன்னை சமர்ப்பணம் செய்துவிட்டால் எண்ணமும், இதயமும், விருப்புறுதியும் இறைமயமாகிவிடும்' என்றேன்.

'அகந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மனதை, வாழ்வை, உடலை செம்மை செய்யவில்லை. இவற்றை இறைவனின் கோவிலாக்கவே சமர்ப்பணம் செய்கிறோம். சரிதானே?' என்றாள் பூரணி.

'சமர்ப்பணம் முழுமையாகாமல் அதைச் செய்ய முடியாது' என்றேன்.



'அகந்தையே மனிதனாக இருக்கும்போது அது சமர்ப்பணமாகிவிட்டால் எது எஞ்சும்? இறைவனுக்கு எது கருவியாக இருக்கும்?' என்று கேட்டாள் பூரணி.

'சிறு அகந்தையின் பின்னே மாபெரும் ஆன்மீக புருஷன் இருக்கிறான். சமர்ப்பணத்தால் அகந்தை கரைந்தபின் அவன் வெளிப்படுகிறான். அவன் கரைவதில்லை. அவனே இறைவனின் விருப்புறுதியை நிறைவேற்றும் கருவியாக இருப்பான். அது நடக்க சமர்ப்பணம் இடைவிடாமல் செய்து கொண்டிருப்பது தேவையான ஒன்று' என்றேன்.

'எந்த அளவிற்குச் சமர்ப்பணம் செய்தால் யோகம் பலிக்கும்?' என்று கேட்டாள் பூரணி.

'முழுமையான சமர்ப்பணம் குறைந்தபட்ச தகுதி. அந்தத் தகுதி இல்லாமல் பூரணயோகத்தின் முதல் சித்தி கிடைக்காது' என்றேன்.

'அது என்ன சித்தி?' என்று கேட்டாள் பூரணி.

'தான் பிரபஞ்சமாகி இறைசக்தி தன்னுள் தடையின்றி இடையறாமல் செயல்படும் நிலையைப் பெறுவதே முதல் சித்தி' என்றேன்.

'நீங்கள் சொல்வதைச் செய்து முடிக்க தொடர்ந்து முயன்றாலும் நீண்ட காலமாகும் என்று தோன்றுகிறது' என்றாள் பூரணி.

'பூரண சமர்ப்பணம், பூரண சரணாகதி. அதைச் செய்து முடிக்க நீண்ட காலமாகும்தான்' என்றேன்.

பூரணி ஏதேனும் கேள்வி கேட்பாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால் அவள் கேட்கவில்லை. அவள் தன்னுள் மூழ்கியவளாக இருந்தாள். சிறிது நேர மௌனத்திற்குப் பின் மீண்டும் நானே பேசினேன்.

'அந்த நீண்ட காலத்தை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம் மனித செயலாலானது. மூன்றாவது கட்டம் இறை செயலாலானது. நடுவே இருக்கும் கட்டம் மனிதசெயலும், இறைசெயலும் கலந்திருக்கும் கட்டம்' என்றேன்.

‘தூய பாலை அழுக்கு பாத்திரத்தில் ஊற்றுவது தவறு. முதலில் பாத்திரம் சுத்தமாக வேண்டும்’ என்றாள் பூரணி.

‘அதேதான். முதல் கட்டத்தில் முழு அகந்தையோடு நுழைகிறோம். அகந்தை உள்ளவரை மனித முயற்சி அவசியம். பூரண சரணாகதி நிறைவேறும் மூன்றாவது கட்டத்தில்தான் மனித முயற்சியற்ற இறைசெயல் நிகழும். இறை சக்தியை அழைத்துக் கொண்டே இருந்தால் முதல் கட்ட மனித முயற்சி எளிமையாகத் தொடங்கும்’ என்றேன்.

‘நான் முதல் கட்டத்தில் எங்கிருந்து என் முயற்சியை ஆரம்பிக்க வேண்டும்?’ என்று கேட்டாள் பூரணி.

‘எங்கு இருக்கிறோமோ அங்கிருந்துதான். முதல் கட்டத்தில் இறைவாழ்விற்கு நம்மைத் தயார் செய்து கொள்வதற்காக சுய முயற்சியை முழுமையாக எடுக்க வேண்டியிருக்கும். எதிலும் இறைவனை நினைத்து, உணர்ந்து அவனுக்காக செயல்படும் பாவனையை மேற்கொள்வதும், இறையார்வத்திற்கு ஒத்துவராத எதையும் ஏற்க மறுத்து அனைத்தையும் இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்வதும் நிகழ வேண்டும். இந்த முயற்சி முழுச் சுயார்ப்பணத்தை நிகழ்த்தி சரணாகதிக்கு இட்டுச் செல்லும். இதை அடிப்படையாகக் கொண்டால் நாம் எங்கிருந்தாலும் எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று புரிந்து கொள்வது சுலபம்’ என்றேன்.

‘புரிகிறது’ என்றாள் பூரணி.

‘இரண்டாம் கட்டம் மனிதநிலைக்கும், இறைநிலைக்கும் இடைப்பட்ட நிலை. மனிதசக்தி குறைவாகவும், இறைசக்தி அதிகமாகவும் செயல்படும் நிலையிது. மேலிருந்து பாய்ந்திறங்கும் இறைசக்தி அற்புதமாக செயலாற்றுவதைக் கண்களால் காணக் கூடிய நிலையிது. மூன்றாம் கட்டம் கதிரொளியால் மொட்டு இயல்பாக மலராவதைப் போல சாதகமும், செயலும் முழுக்க முழுக்க இறைவிருப்பத்தின்படி இயல்பாக நடக்கும். அது மனித முயற்சியோ, முறையோ எதுவுமற்ற நிலை’ என்றேன்.



‘ஒரு கட்டம் முடிந்து அடுத்த கட்டம் ஆரம்பிப்பதை அறிந்து கொள்வது எப்படி?’ என்று கேட்டாள் பூரணி.

‘கட்டங்கள் அடுத்தடுத்து உள்ளன என்றாலும் ஒன்று முடிந்த பின்தான் அடுத்தது ஆரம்பிக்கும் என்று சொல்ல முடியாது. இரண்டாவது கட்டம் ஆரம்பித்த பின்னும் முதல் கட்டத்தின் சில நிலைகள் அவ்வப்போது குறுக்கிடும். பிரம்மம் இறுதியில் தரப் போகும் பரிசு என்ன என்பதை உணர்த்துவதற்காக மூன்றாம் கட்ட நிலை அவ்வப்போது முதல் கட்டத்தில் தலைகாட்டும். முதல் கட்டத்தில் முழுமையான மாற்றம் ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே உயர்ந்த சக்தி ஒன்று நம்மை வழி நடத்துகிறது என்ற உணர்வு ஏற்படும்’ என்றேன்.

‘இது ‘உயர்ந்த சக்தி நம்மை கருவியாக்கி செயல்படுகிறது, நம் சுயார்ப்பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான மறுமொழியும் கிடைக்கத் தொடங்கிவிட்டது’ என்பதற்கான அடையாளம். தான் தேர்ந்தெடுத்தவனைத் தன் திருக்கரங்களால் தூயவன் இறுகப் பற்றிக் கொண்டு விட்டான் என்ற நிலை. சரியா?’ என்றாள் பூரணி.

‘நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். எது எப்படியோ இப்படியெல்லாம் நடக்கும்போது மெல்ல மெல்ல நம் அகமும், புறமும் பேரொளியின் தீண்டலால் பக்குவப்படுகிறது என்பதை உணர முடியும்’ என்றேன்.

‘அதிகப்பிரசங்கியாக நிறைய கேள்விகள் கேட்கிறேனா?’ என்று கேட்டாள் பூரணி.

‘இடைவிடாமல் பிரம்மத்தைப் பற்றி பிறருக்கு உபதேசித்துக் கொண்டிருந்தால் மேலிருந்து கீழிறங்கும் சத்தியம் மதங்களாக மாறிவிடுகிறது. அது பிரம்ம உபதேசத்தின் பலன். எக்கருத்தையும் பற்றி கேள்வி எழுப்புவதன் மூலம் முரண்பட்டு நிற்கும் கருத்துகளிடையே இணக்கத்தை உருவாக்கி, மேலுயர்ந்து மறந்த சத்தியத்தை மீண்டும் அடையலாம். அது பிரம்ம சம்வாதம். பிரம்ம உபதேசத்தைவிட பிரம்ம சம்வாதமே எனக்குப் பிரியமானது’ என்றேன்.

நான் தங்கியிருந்த இடம் வந்து விட்டது. ஏன் இவ்வளவு சீக்கிரமாக வந்தது என்று தோன்றியது. பேச இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றனவே!

காரிலிருந்து இறங்கியபின், பூரணியை நான் தங்கியிருந்த அறைக்கு அழைக்கலாமா வேண்டாமா என்று யோசித்து முடிவெடுப்பதற்குள், 'இன்னும் எத்தனை நாட்கள் இங்கே தங்கி இருப்பீர்கள்?' என்று கேட்டாள் பூரணி.

'இன்றே கிளம்பி இருக்க வேண்டும். மழை தங்க வைத்து விட்டது. நாளை காலை புறப்பட வேண்டும்' என்றேன்.

'காலையில் உங்களோடு பேச முடியுமா? நாளை மதியம் போங்களேன்' என்றாள் பூரணி.

என்ன பதில் சொல்லலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே என் நாக்கு 'சரி' என்றது.

'நாம் பேசியவற்றிலிருந்து பூரண யோக அழைப்பை ஏற்றதும் உடனே செய்யக் கூடியது என்ன என்று புரிந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு வினாடியிலும் எந்தவொரு அசைவையும் என் நெஞ்சிலிருக்கும் தேவனை அழைத்துச் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அவனைத் தவிர வேறெவருக்காகவும், வேறெதற்காகவும், எதையும் செய்யப் போவதில்லை' என்றாள்.

'அழைப்பையும், சமர்ப்பணத்தையும் தவிர வேறு என்ன வேண்டும்? எப்போதிலிருந்து உங்கள் யோக முயற்சியை ஆரம்பிக்க உத்தேசம்?' என்று கேட்டேன்.

பூரணி என் கண்களைப் பார்த்து புன்னகைத்தாள். பின் கையசைத்துவிட்டு காரை நகர்த்தினாள்.

நீரற்றுக் காய்ந்துபோன மலர்ச்செடி, மழைத்தூறலால் விரிந்தெழுவதைப் போல, அவள் புன்னகையால் என்னிதயம் விரிந்தது. உற்சாகத்துடன் என்னறைக்குள் நுழைந்து, புத்தகப் பையையும், குடையையும் மேசை மீது வைத்துவிட்டு, படுக்கையில் சாய்ந்தேன். பூரணியோடு தினமும் பேச வேண்டும். அவளை மகிழ்விக்க வேண்டும். கருத்துகளை, புதிய சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தி விளக்க



வேண்டும். என் சிந்திக்கும் திறனை, விளக்கும் திறமையை உணர்ந்து அவளது விழிகள் வியப்பால் விரிய வேண்டும். அது அடிக்கடி நடக்க வேண்டும்.

பூரணியைச் சந்தித்த பரபரப்பும், படபடப்பும் அடங்கியபின் என் போதம் விழித்துக் கொண்டது.

இவ்வளவுதானா என் ஆன்மீக ஆர்வம்? நான் உண்மையில் பூரணயோக சாதகன்தானா? அழகிய இளம்பெண்ணைப் பார்த்ததும் இப்படியா என்னிலையை மறந்து போவேன்?

இவள் எதற்காக என் வழியில் குறுக்கிட்டாள்? முற்காலத்தில் முனிவனின் தவத்தைக் கலைக்க மயக்கும் அப்சரஸ் வருவாளாம். என்னை மயக்க வந்த அப்சரஸா பூரணி?

துரியா, மூடா, மூடா, மங்கை ஒருத்தி உன்னை மயக்கினாள் என்றால் அது அவள் குற்றமா, உன் குற்றமா? முட்டாளாக, சுயஏமாற்றுக்காரனாக இருக்காதே.

இவளது கண்களை நேருக்கு நேர் பார்த்தேனே? அதன்பின்னும் எப்படி என்னால் அவளைப் பற்றி இப்படி யோசிக்க முடிகிறது?

இத்தனை நேரம் பூரணிக்கு நான் கூறியது அத்தனையும் எனக்கு நானே கூறிக் கொண்டதுதான். எதையும் விலக்காதே என்று கூறினேன். பெண்களோடு பழகுவதை இதுவரை தவிர்த்தே வந்திருக்கிறேன். அவர்களால் கவனம் சிதறி விடுமோ என்ற அச்சம். என் அகத்திலிருந்த அச்சத்தை எனக்கு உணர்த்த பெண்ணுருக் கொண்டு வந்த பிரம்மம் பூரணி.

என்னைப் போன்ற வாலிபனின் அருகாமையாலோ, பழகும்போதோ, சிறிதும் சலனமடையாமல், எத்தனை இயல்பாக நான் கூறுவதைப் புரிந்து கொள்வதிலேயே அவள் கவனமாக இருந்தாள். அதே சமயம் காரை எத்தனை லாவகமாக ஓட்டினாள். நான்தான் சலனமடைந்து விட்டேன். பெண்ணின் அருகாமையை, அவளது மென்மை தரும் இனிமையை என் ஆண்மை விரும்புகிறது. நான் அப்படியெல்லாம் இல்லை என்று சொல்வதால் என்ன பயன்? உள்ளதை ஒப்புக் கொள்ள மறுத்தால் முன்னேற்றம்தான் தடைபடும்.

பெண்ணின் அழகின் மீது, ஆனந்த அலைகளை இதயத்திலும், உணர்விலும், உடலிலும், ஏற்படுத்தும் பெண்மை மீது நான் காதல் கொண்டுவிட்டேன் என்பதை ஏற்கிறேன். இருப்பதை, உள்ளதை உள்ளபடி ஏற்பதைத் தவிர பூரண யோக சாதகனுக்கு வேறு வழியில்லை. இந்தச் சலனத்தை, காதலை, பூரணிக்குள் இருக்கும் பிரம்மத்தின் மீது, அவளது இதயத்திற்குள் சுடர் விட்டு ஒளிரும் சைத்திய புருஷனின் மீது கொண்ட அன்பாக மாற்றுவேன்.

இன்று காலையில்தான் ஒரு குட்டிக் கதையை வாசித்தேன்.

ஒரு நாளிரவு அந்தகன் ஒருவன் மெழுகுவர்த்தி ஏற்றிக் கொண்டு, தெருவில் நடக்க ஆரம்பித்தான். ‘உனக்குத்தான் கண் தெரியாதே, எதற்கு விளக்கு?’ என்று பக்கத்து வீட்டுக்காரன் கேட்டான், ‘மற்றவர்களுக்குத் தெரியுமே, என் மீது மோதாமலிருப்பார்கள்!’ என்று கூறிவிட்டு நடந்தான் அந்தகன். சிறிது நேரத்தில் யாரோ அவன் மீது மோத, கோபத்துடன் ‘விளக்கைக் கண்டு விலகக் கூடாதா?’ என்று கேட்டான். மோதியவன், ‘தோழா, உன் விளக்கு ஏற்கனவே அணைந்து விட்டிருக்கிறது, உன்னால் அதை அறிய முடியவில்லை’ என்றான்.

அறியாமையில் இருக்கும் நான், அடுத்தவருக்கு வழிகாட்ட கிளம்பி விட்டேன். முதலில் என் அகத்தினுள் அணையாத தீபத்தை ஏற்றுகிறேன்.

என்னிடம் கற்றுக் கொள்ள விரும்பும் பூரணியை என் வழிகாட்டியாக, குருவாக ஏற்கிறேன்,

பிறரின் நிறைகளை மட்டுமே பார்க்கும் பூரணி என் குறையை நீக்கட்டும்.

(தொடரும்)

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# நல்லெண்ணம்

'அபரிமிதமான செல்வம்' என்ற கட்டுரையில் பல பெரிய கருத்துகள் கூறப்படுவதில் நல்லெண்ணம் குறிப்பானது. நல்லெண்ணத்தின் பவரை அனுபவித்த அன்பர் கூறுவது: ''3 நாள் நான் என் நண்பருக்குத் தொடர்ந்து என் நல்லெண்ணத்தைக் கருத்தாக, செயலாக, பலனாக அனுப்பினேன்.'' பெற்றவர் அன்பரிடம் ''ஈடு வைத்த நகைகளை மீட்க முடியாத நிலையில் பெரும் உதவி பெற்று மீட்டேன். எனக்கு உதவியவர் வட்டி கேட்கவில்லை. ஆபீஸில் வேலையில் உயர்வு வந்தது. அவர் தகப்பனார் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று பாங்கில் வேலை செய்தவர். ஒரு பென்ஷன் பெறும் கட்டமுண்டு. இரண்டு பென்ஷன் பெறும் உரிமை சட்டமாயிற்று.''

நல்லெண்ணம் சக்தி வாய்ந்தது.

அது பிறர் வாழ்வை அளவு கடந்து உயர்த்தும்.

எலிசபெத் நல்லெண்ணம் ஜேனுக்குப் பலித்தது.

சார்லெட் நல்லெண்ணம் எலிசபெத்திற்குப் பலித்தது.

நாம் பணம் பலனாக வருவதை அறிவோம்.

நல்லெண்ணம் தரும் பலனில் ஆன்மீகப் பலன் முதன்மையானது.

வாழ்க்கைப் பலனில் ஓர் நல்லவராவது பெரியது, அவர் அந்தஸ்து உயர்வது அடுத்தது. பணம் முடிவானது.

# ஏன் எனக்கு இந்தக் கஷ்டம்

இந்தக் கேள்வி எல்லோருக்கும் எப்பொழுதும் தவறாது எழும். மனிதன் தெரிந்ததைச் செய்ய மாட்டான். பழைய தவற்றைத் திரும்பச் செய்யாமலிருக்க மாட்டான். பலனுக்காக மட்டும் அன்னையை நாடுவான். பலனைப் பெறும்பொழுது அன்னையை மறப்பான்.

*அன்னையை மறப்பதால் நினைவுபடுத்த கஷ்டம் வருகிறது.*

இளைஞன் அன்னையை வழிபட ஆரம்பித்தான். நல்ல வேலையிலிருக்கிறான். தாயார் அன்னை படத்திற்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார். கம்பெனியில் 250 பேரை குறைக்கிறார்கள். அதில் இவனும் ஒருவன். தாயாருக்குத் தெரியாமல் படத்தைப் பெட்டியில் மறைத்து வைத்தான். தினமும் தியான மையம் வந்தான்.

கம்பெனியில் வேறொரு டிபார்ட்மெண்ட் இவனை மட்டும் எடுத்துக் கொள்ள சம்மதித்தது. பிரார்த்தனையைத் தொடர்ந்தான். வேறு கம்பெனியில் இரண்டு மடங்கு சம்பளம் கிடைத்தது. தாயார் மனம் மாறினாள். ''தினமும் மையம் போ. படத்தை வைத்துக் கொள்'' என்றாள்.

- பலனுக்காக வழிபாடு கடைசி கட்ட வழிபாடு.
- பலனை மறந்து வழிபட மனிதனால் முடியவில்லை.
- அன்னையை மறந்து பலனை மட்டும் நினைப்பவனுக்கு இந்தக் கஷ்டம் தவறாது வரும்.
- மனிதன் மனிதனாகி, உயர்ந்த வழிபாட்டை ஏற்றால் வாழ்க்கையும் உயரும்.
- மனம் சிறியதானால் கஷ்டம் வந்தபடியிருக்கும்.